தர்மசக்கரம்



ரோதன ௵ ஆவணி மீ சக்கரம் 34 ஆரம் 8

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639 115 திருச்சி ஜில்லா

வேண்டுகோள்

சேலத்தில் நடைபெற்று வருகின்ற ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரியைப் பூர்த்தி பண்ணுவதற்காக 1974ஆம் ஆண்டு தர்ம சக்கரத்தின் மூலம் டிபாஸிட் வேண்டு மென்று கோரினோம். அதற்காக அன்பர்களிடமிருந்து சுமார் 20 லக்ஷம் ரூபாய் டிபாஸிட்டாக வந்து சேர்ந்தது. அத்தொகையை வைத்துக்கொண்டு அதிவிரைவில் அந்த ஸ்தாபனத்தைப் பூர்த்திபண்ணினோம். டிபாஸிட்டுகளும் குறித்த காலத்தில் திருப்பிச் செலுத்தப்பட்டுள்ளன.

இப்பொழுது திருநெல்வேலியில் இந்து மகளிர் கல்லூரி ஒன்றுக்குத் தேவை ஏற்பட்டுள்ளது. அதன் அவசியத்தை உணர்ந்த தபோவனம் அப்பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறது.

திருநெல்வேலிக்கு அருகில் சுமார் 5 மைல் தூரத்தில் தூத்துக்குடி போகும் பாதையை ஒட்டி உள்ள தளவாய் முதலியார் தர்ம டிரஸ்டைச் சேர்ந்த பூமியில் இந்தக் கல்லூரி கட்டுவதற்காக என்று 75 ஏக்கர் நிலத்தை நிரந்தர குத்தகைக்கு எடுத்து ரிஜிஸ்டர் செய்துள்ளோம். இவ் ஆண்டு இக் கல்லூரி திறப்பதற்கு அரசாங்கத்திடம் விண்ணப்பம் போட்டுள்ளோம்.

இதில் அபிமானம் கொண்டுள்ள அன்பர்கள் சேலத்துக்கு உதவியது போன்று இதற்கும் டிபாஸிட் மூலம் உதவிசெய்ய முன் வரவேண்டுகிறோம்.

டிபாஸிட்களுக்கு முறையே டிபாஸிட் ரசீது வழங்கப்பெறும். ஓர் ஆண்டு கெடுவிற்கு 9% வீதமும் இரண்டு ஆண்டு கெடுவிற்கு 10% வீதமும் மூன்று ஆண் டும் அதற்கு மேலும் உள்ள கெடுவிற்கு 11% வீதமும் வட்டி தரப்படும். எப்பொழுது வேண்டுமானாலும் முதலைத் திரும்பிப் பெற்றுக்கொள்ளலாம். அதற்கு மேலே குறித்துள்ள படி கெடுவிற்கு ஏற்ற வட்டி விகிதம் கணக்கிட்டுத் திருப்பித்தரப்படும். இங்ஙனம் டிபாஸிட் செய்யும் தொகை ரூபாய் ஒரு ஆயிரத்துக்குக் கீழ் போகக்கூடாது. வட்டி ஆண்டிற்கு ஒரு முறை செலுத்தப் பெறும்.

பணம் அனுப்பும் முறை: ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம் என்ற பெயரில் தாங்கள் அனுப்புகிற தொகைக்குத் திருச்சியில் உள்ள பேங்குகளில் மாற்றத் தக்கதாக டிராப்ட் எடுத்து A/c Payee என்று கிராஸ் செய்து தபாலில் தபோவனத்துக்கு அனுப்பி வைக்கலாம். யார் பெயருக்கு ரசீது போடவேண்டுமோ அவரது தபால் விலாசத்தைத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டுகிறோம்.

ஏற்கனவே தபோவனத்தில் டிபாஸிட் செய்துள்ள தொகைகளுக்கு 1—1—85 முதல் மேற்படி வட்டி விகிதப்படியே வட்டி தரப்படும்.

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
திருப்பராய்த்துறை-639 115
திருச்சிராப்பள்ளி ஜில்லா
24—7—85

சுவாமி சித்பவானந்த
தலைவர்

தர்ம சக்கரம்
மாத சஞ்சிகை

சக்கரம் 34	குரோதன ௵ ஆவணி ௴	ஆரம் 8

பொருளடக்கம்

சந்தா விவரம்

டிபாஸிட் சந்தா: ரூ. 150 அனுப்பி இங்கு டிபாஸிட் செய்துவிட்டால் டிபாஸிட் இங்கு இருக்கும் வரையில் மாதந்தோறும் தர்ம சக்கரம் பத்திரிகை தங்களுக்கு வந்து கொண்டிருக்கும். ஆண்டுதோறும் சந்தா செலுத்திப் புதுப்பிக்கவேண்டியதில்லை. பத்திரிகை வேண்டாம் என்று கருதும் பொழுது டிபாஸிட் செய்த ரூபாய் நூற்றைம்பதையும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். இந்தத் திட்டம் உள்நாட்டுக்கு மட்டும் உரியது.

ஆண்டு சந்தா: ரூ. 15 செலுத்தியது முதல் அல்லது அடுத்த மாதம் முதல் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் தேதியில் கிடைக்கும்படி பத்திரிகை அனுப்பப்படுகிறது.

சகாய சந்தா: மாத வருவாய் ரூ. 200 அல்லது ஆண்டு வருவாய் ரூ. 2400க்கும் குறைவாக உள்ளவர்கள் ஆண்டு சந்தா பதினைந்து செலுத்த இயலாது இருந்தால் ரூபாய்க்கு பத்து அனுப்பலாம். பாக்கி ரூபாய் ஐந்தைப் பாண்டிச்சேரி S. விஸ்வநாதன் 'தர்ம சக்கர உதவிநிதி'யினின்று ஈடுசெய்து கொள்கிறோம். தெய்விக விஷயமாதலால் ரூ. 15 செலுத்த இயலுகிறவர்கள் இந்தச் சலுகையைப் பயன்படுத்த வேண்டாம்.

தமிழ் நாட்டிலும் பாண்டிச்சேரியிலும் உள்ள அரசாங்கப் பொது நூலகங்கள் அனைத்துக்கும் தர்ம சக்கரம் அன்பர்களின் உதவியால் தொடர்ந்து அனுப்பப்பெறுகிறது. நூலக நிர்வாகியிடம் கேட்டுப் பெற்றுப் படித்துப் பயனடையக் கோருகிறோம்.

உள்நாடு தனி இதழ் ரூ. 1-50 வெளிநாடு தனி இதழ் ரூ. 4-00

உள்நாடு வருட சந்தா: ரூ. 15-00 வெளிநாடு வருட சந்தா: ரூ. 45-00

அந்தர்யோக விவரங்கள்

சென்னை—சூளைமேடு சக்திநகர் 2-வது தெருவில் 18—8—85 ஞாயிறு

இடம்: ஸ்ரீ சக்திபுரீஸ்வரர் ஆலயம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி துருவானந்தர்

மதுரை மாவட்டம்—பெரியகுளத்தில் 20—8—85 செவ்வாய்க்கிழமை

இடம்: வரதராஜப்பெருமாள் கோயில்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி துருவானந்தர்

கோவை ஜில்லா—சித்திரச்சாவடியில் 1—9—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண-விவேகானந்த ஆச்ரமம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
உணவு வசதி: பகல் உணவிற்கு ரூ. 2-00ம் மாலைச் சிற்றுண்டிக்கு ரூ. 1-50ம் நேரில் [செலுத்தவும்

தர்மபுரி ஜில்லா—பாலஜங்கமனஹள்ளியில் 1—9—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: அருள்மிகு பச்சையம்மன் தேவஸ்தானம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

தர்மபுரி ஜில்லா—பாப்பாரப்பட்டியில் 2—9—85 திங்கட்கிழமை

இடம்: பழைய சுப்பிரமணிய சுவாமி கோவில்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

திருச்சி ஜில்லா—தாத்தையங்கார் பேட்டையில் 8—9—85 ஞாயிறு

இடம்: பிருந்தாவன கல்யாண மண்டபம்
நேரம்: இரவு 7-45 மணி முதல் இரவு 9-45 மணி வரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

கோவை ஜில்லா—பல்லடத்தில் 15—9—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: காந்தி ரோடு, ஹைஸ்கூல் எதிரிலுள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்ரமம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

மதுரை மாவட்டம்—தோப்பூரில் 15—9—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: சிவானந்த தபோவனம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி துருவானந்தர்

ஸ்ரீ காமராஜ் மாவட்டம்—விருதுநகரில் 22—9—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: பெரிய காளியம்மன் கோவில்
நேரம்: காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி ஸதானந்தர்

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 34 || குரோதன ௵ ஆவணி ௴ || ஆரம் 8

பிரார்த்தனை

कुरुते गङ्गासागरगमनं व्रतपरिपालनमथवा दानम् ।
ज्ञानविहीने सर्वमनेन मुक्तिर्नभवति जन्मशतेन ॥
भज गोविन्तदं ॥

—शंकराचार्य

குருதே கங்காசாகர கமனம் வ்ரதபரிபாலனமதவா தானம் ।
ஞானவிஹீனே சர்வமனேன முக்திர் நபவதி ஜன்மசதேன ॥
பஜகோவிந்தம் ॥

— சங்கராச்சாரியர்

கங்காசாகரம் யாத்திரை செல்லலாம். விரதங்களை அனுஷ்டிக்கலாம். தானம் செய்யலாம். ஆனால் ஞானம் இல்லாது இவைகளால் மட்டும் நூறாண்டுகளாயினும் முக்தி அடைந்துவிட முடியாது. ஆகவே கோவிந்தா, உம்மை வழிபடுகின்றேன்.

கங்கை யாடிலென் காவிரி யாடிலென்
கொங்கு தண்குமரித்துறை யாடிலென்
ஓங்கு மாகடல் ஓதநீ ராடிலென்
எங்கும் ஈசன்என் னாதவர்க்(கு) இல்லையே.

— திருநாவுக்கரசர்

அருள் விருந்து

அடக்கமுடையவன் அருளுக்குப் பாத்திரமாகிறுன்.

பெருவாழ்வில் நம்பிக்கையற்ற மனது பொல்லாதது.

இலட்சியம் ஒன்றுக்கு உழைப்பதற்கேற்ப மனிதன் தரத்திலே மேலோங்குகிறுன்.

இன்று இருந்து நாளை அழியும் உடலைப் பேணுதற்கு மனிதன் படும்பாடு தான் என்னே!

உலக நன்மைக்கு உழைப்பதும் இறைவனுடைய அருளைச் சார்ந்திருப்பதும் ஒன்றேயாம்.

சாவது எளிது; ஆனுல் ஆபத்து ஒன்றைச் சமாளிக்க ஒரு வீரனுக்கே சாத்தியமாகிறது.

மெய்ப்பொருள் நாட்டமும் உயிர்களனைத்தையும் நேசித்தலும் இணைபிரியாதவைகளாம்.

உலகில் வாழ்ந்திருந்த பெருமக்கள் எல்லாரும் ஆரம்பதசையில் தன்னந்தனியராகவே உழைத்தனர்.

பாரமார்த்திகப் பெருமனதோடு ஒட்டி உறவாடும் பாங்கில் என்னுடைய அல்ப மனது தூய்மையடைவது ஆகுக.

பிறரை வஞ்சிப்பதற்கு இடம் தரலாகாது. உயிரைக் கொடுத்தாவது அப்பொல்லாங்கை ஒழித்தல் வேண்டும்.

சுயநலத்தை ஒதுக்கித் தள்ளுவதற்கு ஏற்ப சாதகன் ஒருவன் பாரமார்த்திகப் பெருவாழ்வுக்குத் தகுதியுடையவன் ஆகிறுன்.

அசையும் பாங்குடைய ஒழுக்கம் உதவாது. வஜ்ரம் போன்று அது தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ளவேண்டும்.

பிறரைச் சினந்து கொள்ளுதலிலும் தான் செய்த குற்றத்தை முன்னிட்டுத் தன்னையே சினந்து கொள்ளுதல் சாலச்சிறந்தது.

இரவுவேளை நட்சத்திரத்தை விளக்கிக் காட்டுவது போன்று கஷ்ட தசை ஒரு மனிதனுடைய தரத்தை விளக்கிக் காட்டுகிறது.

இடையன் கழியைக் கொண்டு கால்நடைகளை மைதானத்துக்கு ஓட்டுவது போன்று முதுமையும் மரணமும் மக்களை வாழ்வினின்று விரட்டியோட்டுகின்றன.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

காவியுடையணிந்திருந்த மானுடன் ஒருவன் பரமஹம்சதேவரின் அறைக்குள்ளே புகுந்து அவரை வணங்கினன். அக்காட்சியைப் பார்த்த பலராம்வசு கொல்லென்று சிரித்தார். அப்படி அவர் நகைத்ததற்கேற்றகாரணமும் இருந்தது. புதிதாக வந்துள்ள மனிதன் பரமஹம்ச தேவரைப் பொய்வேஷக்காரர் என்று ஆங்காங்குப் பிரசாரம் செய்து வந்தான். ஒரு மனிதனுடைய மனப்பாங்கை உள்ளபடி அறிந்துகொள்ளும் திறமை பரமஹம்சதேவரிடம் இயல்பாகவே அமைந்திருந்தது. ஆதலால் வந்தவரைப் பார்த்து நகைத்த பலராம்வசுவிடம் பரமஹம்சதேவர் பகர்ந்ததாவது: "நான் ஒரு பொய்வேஷக்காரன் என்று மக்கள் என்னைப் பற்றி என்ன வேண்டுமானாலும் எண்ணிக் கொள்ளட்டும். அல்லது பிறரிடம் தங்கள் கருத்தை எடுத்து விளம்பரப்படுத்தட்டும். அதனால் ஆவது என்ன?"

பரமஹம்சதேவர் தேஜ்சந்திரனோடு உரையாடிக் கொண்டிருந்தார்.

பரமஹம்சதேவர்: "நீ இங்கு வரவேண்டுமென்று அடுத்தடுத்து நான் உனக்குச் சொல்லியனுப்பி வந்துள்ளேன். நீ ஏன் அடுத்து அடுத்து இங்கு வரலாகாது? நீ முறையாகத் தியானம், பிரார்த்தனை முதலிய ஆத்ம சாதனங்களைச் செய்து வருவாயாகில் அதைக் குறித்து நான் பெருமகிழ்வு அடைவேன். உன்னை நான் இங்கு வரும் திருக்கூட்டத்தைச் சேர்ந்தவனாகக் கருதி வருகிறேன். ஆதலால் தான் நான் உன்னைப் பல தடவை வரும்படி அழைத்தேன்."

தேஜ்சந்திரன்: "ஐயனே, எனக்கு அலுவல்கள் பல உள. நான் பணிவிடை செய்து வருகின்ற காரியாலயத்தில் அமைந்துள்ள அலுவல்களுக்கு முடிவு இல்லை."

மகேந்திரர்: (புன்னகை பூத்தவராக) "இவருடைய வீட்டில் விவாகச்சடங்கு ஒன்று நிகழ்ந்தது. அதைச் செய்து முடிப்பதற்காக இவர் பத்து நாள் விடுமுறை எடுக்கலாயினர்."

பரமஹம்சதேவர்: "மிக நன்று. உனக்கு ஓய்வு கிடைப்பதில்லை என்று பகர்கின்றாய். சிறிது நேரத்துக்கு முன்பு நீ உலகைத் துறந்து விடுவதாக என்னிடம் கூறினாய்."

நாராயணன்: "மகேந்திரர் இவ்வுலகானது சிக்கல்கள் பல அமைந்துள்ள வனாந்தரம் போன்றது என்று எங்களுக்கு எடுத்து இயம்பினர்."

பரமஹம்சதேவர் மகேந்திரரிடம் தங்களுக்கிடையில் பேச்சு வார்த்தையிலிருந்த வரலாற்றை எடுத்தியம்பும்படி கூறினர்.

மகேந்திரர் அவ்வரலாற்றை எடுத்து இயம்பினர். "இளைஞன் சாது ஒருவரோடு நெருங்கிப் பழகி வந்தான். ஒரு நாள் தன்னை உள்ளன்போடு தன் உற்றார் உறவினர் எல்லாரும் நேசித்து வந்தார்கள் என்று இயம்பினன். அதற்கு அந்தச் சாது கொடுத்த விடையாவது 'உலகத்தவர் பூணும் அன்பு வெறும் பெயரளவிலேயாம். உள்ளன்போடு நேசிப்பது உலகப் பற்றுடையவனுக்குச் சாத்தியப்படாது' என்று இயம்பினர். ஆனால் சாது கூற்றுக்கு அவன் சம்மதம் கொடுக்கவில்லை. 'நான் சொல்லுகிற பிரகாரம் நீ நடந்து கொள்வாயாகில் உலகத்தவர் கொள்கின்ற அன்பு எத்தகையது என்பதை நான் உனக்கு நிரூபித்துக்காட்ட முடியும்.' இளைஞனும் அவர் கருத்துக்குச் சம்மதம் கொடுத்தான். சாதுவானவர் குளிகை ஒன்றை எடுத்து இளைஞன் கையில் கொடுத்து 'வீட்டில் உற்றார் உறவினரோடு உரையாடிக் கொண்டிருக்கிறபொழுது அவர்கள் யாருக்கும் தெரியாதபடி நீ தனியாக அறைக்குள்ளே சென்று இக்குளிகையை அருந்தி அதற்கு மேல் கொஞ்சம் தண்ணீர் பானம் பண்ணி விட்டு வந்து அவர்களோடு உரையாடிக்கொண்டிரு. பிறகு நிகழ்கின்றவைகளனைத்துக்கும் நீ சாட்சியாக இருப்பாய். உலகத்தவர் அன்பு எத்தகையது என்பதை நீ அறிந்து கொள்வாய்.' இளைஞனும் இந்த ஏற்பாட்டுக்குச் சம்மதம் கொடுத்தான். இளைஞன் உற்றார் உறவினருடன் அளவளாவி உரையாடிக் கொண்டிருந்த பொழுது திடீரென்று வலிப்பு நோய்க்கு ஆளானன்.

கை கால்களை உதறிக்கொண்டு மாண்டுபோனவன் போன்று மூச்சுப் பேச்சற்றுக் கிடந்தான். ஆயினும் அவன் சாகவில்லை. தோற்றத்தளவில் செத்தவன் போன்று கிடந்தான். தாயும் தந்தையும் கதறிப் பதறினர். தலையிலும், மார்பிலும் அடித்துக்கொண்டனர். அண்மையில் அந்த இளைஞனோடு விவாகம் பண்ணிக்கொண்டிருந்த மாதோ புழுப் போன்று பூமியில் விழுந்து அழுது கொண்டிருந்தாள்.

இத்தருணத்தில் சாது ஒருவர் அங்குத் தோன்றினர். நிகழ்ந்தவைகளை அமைதியுடன் விசாரித்தார். பிணம்போன்று பூமியில் கிடந்த இளைஞனை ஆராய்ச்சி பண்ணினர். 'இவனுக்கு உயிர்கொடுத்து எழுப்புவது சாத்தியம். பிராணன் இவன் உடலைவிட்டு இன்னும் அகன்று போகவில்லை. இவனை எழுப்பலாம். ஆனல் அதற்கென்று அமைந்துள்ள திட்டம் தான் மிகக் கடினமானது' என்று தன் அபிப்பிராயத்தை ஆங்கு அப்போது வந்த ஸாது தெரிவித்தார். தாயோ தலையிலடித்துக் கொண்டு 'எப்படியாவது இவனை எழுப்புங்கள். இவனுக்காக உயிரைக் கொடுக்கவும் நான்ஆயத்தமாயிருக்கின்றேன்'என்ருள்.அதே முறையில்தான் தந்தையும் பிரலாபித்தார்.

மேலும் ஸாது இயம்பியதாவது: 'இதோ மந்த்ர சக்தி வாய்ந்துள்ள இக்கயிற்றின் ஒரு நுனியை இவன் கையில் கட்டிவிடுகின்றேன். மற்ருேர் நுனியை இவனைக் காப்பாற்ற வருகின்றவர்களுடைய கையில் கட்டிவிடுகின்றேன். மத்தியில் பிடித்துக்கொண்டு நான் ஜபம் செய்வேன். ஜபிக்க ஜபிக்க இந்த இளைஞன் உயிர் பெற்று எழுந்திருப்பான். ஆனல் அதற்கு ஈடாக மற்றவர் உயிர் துறக்க நேரிடும். இவன் உயிர் பிழைப்பதற்கு வேறு உபாயம் ஏதுமில்லை. இந்த நிபந்தனையை நிறைவேற்றத் துணிந்துள்ளவர்கள் யார் வேண்டுமானலும் முன்னுக்கு வரலாம்.'

இந்த நிபந்தனை வெளியானதும் காட்சி படிப்படியாக மாறியமைந்தது. ஒவ்வொருவரும் தத்தமக்கு ஏற்பட்டிருந்த மற்றக் கடமைகளை முறையாக எடுத்துச் சொல்லி மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்கள். மூர்ச்சைபோன மனைவியோ அதே நிலையில் கிடந்தாள். அது பாசாங்கோ அல்லவோ என்பது அவளுக்குத் தெரியும். அவளைப் படைத்த தெய்வத்திற்குத் தெரியும்.

இப்போது ஸாது இவனுக்காக உயிர் கொடுக்க முன்வருவார் யாருமில்லை. 'என் போக்கில் இவனுக்குத் துணைபுரிய முயலுகின்றேன்' என்று இயம்பிக்கொண்டு கயிற்றின் மற்ற நுனியைத் தம் இடக் கையில் கட்டிக்கொண்டு வலக்கையில் அதைப் பிடித்தபடி ஜபம் பண்ணினர். நிகழ்ந்த அனைத்தையும் செத்தவன் போன்று கிடந்த இளைஞன் அறிய வந்தான். இப்பொழுது கண்விழித்து நாலா பக்கமும் பார்த்தான். ஸாது அந்த இளைஞனைக் கேட்டார்: 'நேற்று நான் உன்னிடம் இயம்பியது முழுதும் உண்மைதானே!' இளைஞன் புன்சிரிப்புடன் எழுந்து நின்று அவர் பாதத்தில் வீழ்ந்து வணங்கினன்.

'உலகத்தவர் ஒருவரை ஒருவர் நேசிப்பது என்பது வெறும் பெயரளவிலேயாம்.' ஆங்குக் குழுமியிருந்த அனைவரும் அவரவர் பரிபாகத்திற் கேற்றவாறு இக்கூற்றை ஏற்றுக்கொண்டனர். மயங்கிக் கிடந்த இளைஞனுடைய மனைவியும் தெளிந்து எழுந்து உட்கார்ந்தாள்."

நண்பகல் நேரம் வந்தது. பலராம் வீட்டில் பிரதிஷ்டை செய்து நித்திய வழிபாடு நடைபெற்று வந்தது பூரி ஜகந்நாத் என்னும் தெய்வத்துக்காம். வழக்கம் போன்று அன்று நடைபெற்ற நித்திய வழிபாட்டை ஒட்டிய அன்னப் பிரசாதம் ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு வழங்கப்பட்டது. அவரும் மகிழ்வுடன் அவ்வுணவை ஏற்றுக்கொண்டார். மற்ருெரு விஷயத்தை அவர் எடுத்து இயம்பினர். பலராமருடைய இல்லத்தில் சமைக்கப்பட்ட உணவானது எப்பொழுதும் தூயதாகவும் சாத்வீகம் நிறைந்ததாகவும் இருந்து வந்தது. நண்பகல் உணவை அருந்தியான பிறகு அவர் சிறிது நேரம் படுத்திருந்து ஓய்வு எடுத்துக் கொண்டார்.

அதன் பிறகு சிறிது நேரத்திற்குள் பக்தர்கள் பலர் அவ்வீட்டின் முன் மண்டபத்தில் குழுமினர். தர்த்தபஜா சம்ப்ரதாயத்தைச் சேர்ந்த சந்திரபாபு என்ற பிராம்மணர் ஒருவர் அக்கூட்டத்தில் இருந்தார். நகைச்சுவை ததும்பும் பாங்கில் அவர் உரையாட வல்லவராயிருந்தார். பல தடவைகளில் அவருடைய

பேச்சானது கேட்டவர்களை விலாப்புடைக்கச் சிரிக்குமாறு செய்யவல்லதாயிருந்தது. இன்னும் சிலவேளைகளில் அவருடைய நடை உடை பாவனைகளில் கோமாளித்தனம் திகழ்வதாயிற்று.

மாலை சுமார் ஆறு மணி இருக்கும். அப்பொழுது கிரீஷ்சந்திரகோஷருடைய சகோதரர் அதுல் என்பவரும் அவருடன் தேஜ்சந்திரனுடைய சகோதரரும் அங்கு வந்து சேர்ந்தார்கள். அஸ்தமன நேரம் ஆகிவிட்டபடியால் பரமஹம்சதேவருடைய மனதானது பிரபஞ்சாதீதத்தில் மூழ்கியிருந்தது. அந்நிலைதான் சமாதி எனப் பகரப்பெறுகிறது. சமாதிநிலையினின்று உலக விவகாரங்களைப்பற்றி உரையாடும் நிலைக்கு அவருடைய மனது கீழே இறங்கி வந்திருந்தது. பரம்பொருள் சைதன்யம் அல்லது பேரறிவு வடிவம் எடுத்துள்ளது. அத்தகைய பேரறிவுப் பொருளைத் தியானம் பண்ணுவதால் ஒருவனுடைய அறிவு மங்கிப் போகுமா? அல்லது கீழ்நிலைதான் அடையுமா? இறைவனைப்பற்றி யாண்டும் எண்ணிக் கொண்டிருக்கும் பக்தன் ஒருவனுடைய மனது கெட்டுப்போகுமா? இறைவனும் பேரறிவும் சொருபத்தில் ஒன்றேயாம். அவர் நித்திய வஸ்து, புனிதன், பேருணர்வு மயமானவர். இப்படிப் பரம்பொருளையும் பக்தனையும்பற்றிப் பரமஹம்சதேவர் பகர்வாராயினர்.

பரமஹம்சதேவர் இப்பொழுது ஆங்கு வந்திருந்த விகடப்பேச்சு நிறைந்திருந்த பிராம்மணனிடம் பகர்வாராயினர்: "அற்பத்தனமும், பொருளற்றதுமான வீண் விஷயத்தைப்பற்றிப் பேசி நீ ஏன் வீண்காலம் போக்குகின்றாய்? உன் மனதைச் சர்வேஸ்வரனிடம் ஒப்படைத்து வைத்துப் பழகு. உவர்க்கின்ற பொருளாகிய உப்பைப்பற்றி ஆராய வல்லவனிடம் தித்திப்பு நிறைந்த சர்க்கரையைப்பற்றியும் ஆராய்ச்சி பண்ணும் திறமை இருக்கிறது."

புன்னகையுடன் அந்தப் பிராம்மணன் பரமஹம்சதேவரிடம் 'என்னை ஆட்கொள்ளுங்கள்' என்று விண்ணப்பித்தான். அதற்கு அவர் பகர்ந்ததாவது: "உன்னை ஆட்கொள்ளும் திறமை என்னிடத்து இல்லை. உன் மனது உனக்குச் சொந்தம். அந்த மனதை வைத்து என்ன வேண்டுமானாலும் செய்யலாம். ஆதலால் அல்ப விஷயங்களில் உழலும் உன் கோமாளித்தனத்தை ஒதுக்கித்தள்ளு. மேலும் மேலும் இறைவனுடைய சாந்நித்தியத்தைச் சார்ந்திருந்து பழகு. இப்பெரிய கோட்பாட்டை யொட்டிய கருத்து ஒன்றை விறகு வெட்டி ஒருவனிடம் சாது ஒருவர் சொன்னார். அச்சாதுவானவர் ஒரு வனாந்தரத்தினின்று வெளியே வந்து கொண்டிருந்தார். அவ்வேளையில் விறகு வெட்டி வனாந்தரத்திற்குள் போய்க்கொண்டிருந்தான். "மேலும் உள்நோக்கிச் செல்" என்று விறகு வெட்டியிடம் சொல்லி விட்டு அச்சாதுவானவர் தம் போக்கில் போய் விட்டார். விறகு வெட்டியும் அவர் சொற்படி வனத்துக்குள்மேலும் கொஞ்ச தூரம் சென்றான். ஆங்கு அவன் கண்டது சுடர்விட்டு எரியும் நல்ல விறகு. அன்றைக்கு அவன் பெற்ற ஊதியமும் அதிகமே. அடுத்த நாள் விறகு வெட்டி இன்னும் சிறிது தூரம் வனத்துக்குள் சென்றான். சந்தனமரம் கிடைத்தது. அதற்கேற்ப ஊதியமும் அவனுக்கு அதிகமாயிற்று. நாள்தோறும் வனத்தினுள் அவன் பிரவேசித்ததற்கேற்றவாறு இரும்புத் தாது, தாமிரத்தாது, வெள்ளித் தாது, பொன் தாது, ரத்தின வகைகள் ஆகியவைகளை அவன் கண்டான். அவைகளை வெட்டி எடுத்துக்கொண்டு வந்து விலைக்கு விற்றுப் பெரிய பணக்காரன் ஆனான். அதேவிதத்தில் ஆத்ம சாதகன் ஒருவன் தன் உள்ளத்தினுள்ளே ஆழ்ந்து செல்லுவானாகில் இறைவனுடைய அருளுக்கும், அனுக்கிரஹத்திற்கும் மேலும் மேலும் அவன் உரியவனாகின்றான். உள்ளத்தினுள் ஆழ்ந்து போகப் போக ஆத்மானந்தம் என்னும் ஞானப் பொக்கிஷத்தைப் பெறுகின்றான். உள்ளே ஆழ்ந்து செல்லுகையில் மனச் சாந்தியும் உண்டாகும்."

'இந்த மார்க்கத்தைப் பின்பற்றுதலில் முடிவு இல்லை' என்று அந்தப் பிராமணன் விடை விடுத்தான். 'இல்லை, நீ சாந்தி அடைவாய். சாந்தியைப் பெற்றான பிறகு மேலும் உள் நோக்கிச் செல்ல வேண்டிய அவசியம் கிடையாது என்றார் பரமஹம்சர்.'

இம்மனிதனைக் குறித்துப் பிறகு பரமஹம்சர் பகர்ந்ததாவது: "இந்த மானுடனிடத்து தரம் ஏதுமில்லை. பொருள் சேராத புன்மையன் இவன்" என்று பகர்ந்தார்.

எந்நாள் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

14-14. தானவன்ஆம் தன்மையைத் தண்டம்என- [அண்டம் எங்கும் ஞானமத யானை நடத்துநாள் எந்நாளோ.

தானவன்—சந்திரன்; சமுதாயத்தில் முதன்மை தாங்குபவன்; தண்டம்-திக்கு விஜயம்; ஞான மதயானை-அருட்செல்வம்.

அருட்துறை, ஆட்சித்துறை ஆகிய இரண்டு துறைகளில் தம்மிடத்துள்ள சிறப்புக்களை மக்களுக்கிடையில் தாராளமாக எடுத்து வழங்குபவன் தானவன் ஆகிறான். அரசர்களும் அருள்வேந்தர்களும் இடைஇடையே நாட்டு மக்கள் மத்தியில் ஆடம்பரத்துடன் பிரயாணம் செய்து ஆங்காங்கு நலன்களை மக்களுக்கிடையில் எடுத்து வழங்கி வருவது பழங்காலத்து முறையாகும். அங்ஙனம் நாடாளும் வேந்தர்கள் நாட்டைச் சுற்றிப்பார்க்கும்பொழுது ஆங்காங்குத் தென்படுகின்ற சமுதாயக் குறைநிலைகளை—நிறைநிலைகளாக மாற்றியமைத்து வந்தார்கள். அதே பாங்கில் அருள் ஆளும் வேந்தர்களாகிய ஞானியர்கள், யோகீஸ்வரர்கள், பக்தர்கள், தவம் புரிகின்றவர்கள் ஆகிய பெருமக்கள் திக்விஜயம் செய்து வந்தார்கள். அங்ஙனம் சான்றோர்கள் செய்து வந்த திக் விஜயங்கள் வாயிலாக மக்களுக்கிடையில் மலிந்து கிடந்த அஞ்ஞான இருளை அகற்றி நல்லறிவைப் புகட்டி ஞானவிளக்கு ஏற்றி வைப்பது பழங்காலத்து வழக்கமாகும். சான்றோர்கள் அச்செயலை எடுத்துக்கொள்வது தற்பெருமையின் பொருட்டன்று; ஆண்டவன் பணிவிடையின் பொருட்டும் நன்மக்களின் நலத்தின் பொருட்டும் செய்து வந்தார்கள். இறைவனுடைய திருவுளச் சம்மதம் இருக்குமாகில் அப்பணிவிடையைப் பண்புடன் செய்து முடிக்க அருளாளர் எல்லாரும் ஆயத்தமாய் இருக்கவேண்டும் என்பது இக்கண்ணியின் உட்பொருளாம்.

14-15. ஒன்றுஇரண்டும் இல்லதுவாய் ஒன்று- [இரண்டும் உள்ளதுவாய் நின்ற சமத்துநிலை நேர்பெறுவது எந்நாளோ.

ஜீவாத்மனும் பரமாத்மனும் இரண்டற்ற நிலை, இரண்டுற்ற நிலை ஆகிய நிலைகள் இரண்டு உள். ஜீவாத்மனுக்கு ஜீவபோதம் இருக்கும் வரையில் பரமாத்மன் ஆண்டான் ஆகவும், ஜீவாத்மன் ஆளப்பெற்றவனுகவும் ஆகிய இரண்டுற்ற நிலை என்னும் வேற்றுமை உண்டு. ஆனல் அயர்ந்து உறங்குகின்ற ஜீவாத்மன் தனது ஜீவபோதத்தை அந்நிலையில் இழக்கின்ருன். ஆங்கு ஆளுபவன், ஆட்பெறுபவன் ஆகிய இரண்டு நிலைகள் இல்லை. சுத்த சைதன்யம் அல்லது சுத்த சிவம் என்னும் பொருள் ஒன்றுதான் எஞ்சி நிற்கின்றது. அப்பொருள் எக்காரணத்தை முன்னிட்டாவது பழுதுபடுவதில்லை. யாண்டும் தன் மயமாய் இருந்து வருகிறது.

ஜீவாத்மனும் அந்நிலையில் தன்மயம் ஆனவனே. ஆயினும் அவனுடைய உள்ளத்தில் புதைந்துகிடக்கின்ற அஞ்ஞானக் கார்இருளில் அவன் தன்னை மறந்திருப்பவன் போன்று தென்படுகிருன். உண்மையில் ஜீவாத்மன் தன்னை மறப்பதுமில்லை; வேறு எப்பொருளும் வந்து அவனை மறைப்பதுமில்லை. படுத்துறங்குகின்ற ஒருவனைப் போர்வைகள் சில போட்டுப் பிறர் காட்சிக்குத் தென்படாது மூடிவைக்கலாம். ஆனல் தான் இருப்பதை உணர்கின்ற அம்மனிதனைத் தன் காட்சியினின்று மறைக்க யாருக்கும் இயலாது. இதுதான் ஜீவாத்மனைப்பற்றிய உண்மை. அவன் முக்குணமயமான அஞ்ஞான இருளில் உழன்றுகொண்டு இருக்கும்போது தன்னைத்தான் அறியாதவனுகச் சுழுப்தி அவஸ்தை அல்லது கனவற்ற உறக்கத்தில் அவன் தென்படுகின்ருன்.

இனி ஆத்ம சாதகன் சாதனங்கள் புரிவது முக்குணங்களை வெல்லுதல் பொருட்டேயாம். அவனிடத்துள்ள தமோகுணம் வெல்லப்படுவதற்கு ஏற்ப ஞானப்பிரகாசம் ஒரு சிறிதளவு அவனிடத்து வடிவெடுக்கிறது. அடுத்தபடியாக ரஜோகுணம் வெல்லப்படுகின்றபொழுது உறக்கத்தையும் ஒருவாறு அவன் வென்றவன் ஆகின்ருன். ஜாக்கிரதாவஸ்தை அல்லது விழிப்பு நிலையில் அவன் புரிகிற எல்லாவிதமான வியவகாரங்களுக்கிடையில் விச்ராந்தியில் அவன் வீற்றிருக்கின்ருன்.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி: (472) பெண்களுக்கு மாதவிலக்கு நேரங்களில் மனநிலை பெரும் அளவில் மாறுபடு கிறது என்று மருத்துவர்கள் கூறுகின்றனர். இது உண்மையா?

ஆசாரங்களில் சில காலத்துக்கு ஏற்ற வாறும் தேசத்துக்கு ஏற்றவாறும் மாறியமை கின்றன. கொஞ்சகாலத்துக்கு முன்பு நம் நாட்டில் வழக்கத்தில் இருந்துவந்த மாத விலக்கு என்னும் ஆசாரம் அதிவேகம் மாறி யமைந்து வருகிறது. மேல்நாடுகளில் அது வெறும் சரீரக்கூறு என அதைப் பெரிதும் பொருள்படுத்துவதில்லை. அதனால் அந்த நாட்டு மக்களுக்கு இடைஞ்சல் ஏதும் வருவதும் இல்லை. இன்றைக்கு ஆசிரியைத் தொழில், மருத்துவத் தொழில், குமாஸ்தா தொழில் ஆகியவைகளில் உத்தியோகம் வகித்து வரும் பெண்பாலர் எண்ணிக்கை நம் நாட்டிலும் அதி வேகம் அதிகரித்து வருகிறது. கிட்டத்தட்ட மேல்நாட்டு மாதர் போன்றே இந்திய மாதர் களும் அதை ஒரு இடைஞ்சலாக ஏற்றுக் கொள்ளுவதில்லை. (Sanitary Towel) சானி டரி டவல் என்னும் உடை அணிதலில் ஒரு புதிய முறையைக் கையாண்டு பொது நல சேவையில் ஈடுபட்டுள்ள அவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட அலுவல்களை முறையாகக் கவனித்து வருகின்றனர். ஆகவே இந்த ஆசாரம் காலத் துக்கும் தேசத்துக்கும் ஏற்றவாறு அனுஷ்டிக் கப்பட்டு வருகிறது. ஆகவே மாதர்கள் தங்க ளுக்குத் தாங்களே தீர்மானித்து அதற்கேற்ற வாறு நடந்து கொள்ளுதலே இப்பிரச்னைக் குற்ற உபாயமாம்.

கேள்வி: (473) நியாயாதிபதி ஒருவர் இரண்டு கட்சிகளையும் சரியாக விசாரித்தான பிறகே தீர்ப்புச் சொல்ல வேண்டும். ஆனால் ராமன் சுக்ரீவனுடைய பேச்சைக் கேட்டதும் வாலி யைக் கொல்லத் தீர்மானித்தது சரிதானா?

இரண்டு கட்சிகளையும் சரியாக விசாரித் தான பிறகே தீர்ப்புச் சொல்லுவது சரியான முறை. ஆனால் ராமன் ஏன் சரியாக நடந்து கொள்ளவில்லை என்பதற்கு ஏற்ற காரணம் உண்டு. வாலி படைத்திருந்த வரத்தின்படி அவனை எதிர்த்துப் போர்புரிதற்கு எந்தத் தேவன் வந்தாலும், அப்படி வருபவனுடைய பலத்தில் பாதிவாலிக்கு உரியதாகிறது. அதன் விளைவாகவெற்றியும் வாலிக்கு உரியதேயாம். அத்தகைய வரத்தால் வாலி கர்வம்பிடித்தவனுக இருந்தான். அந்தவரத்தை அவனிடமிருந்து மீட்டெடுத்தால் ஒழிய அவனை யாரும் வெல்ல முடியாது. அதனல் ஏற்பட்ட கர்வத்தால் உல குக்கு அவன் கேடு மிகச் செய்து வந்தான். ஆதலால் அதற்கேற்ற முறையை இராமன் சரியாகக் கையாண்டான். ராமபாணம் வீண் போகாது என்பது கோட்பாடு. ஒரே பாணத் தில் அவனை அடித்து ராமன் அடக்கினுன். பிறகு தான் அப்படிச் செய்ததற்கு ஏற்ற கார ணத்தை அவனிடம் சொன்னுன். வாலியும் தன் குற்றத்தை உணர்ந்தான். இராமன் செய்தது சரியே என்று ஒத்துக்கொண்டான்.

ஸ்ரீராமன் பரமாத்மாவின் அவதாரம். புரு ஷன் என்னும் சொல்லுக்கு இலக்காக இருப் பவனும் அவனே. எந்த எண்ணம் அவ னுடைய உள்ளத்தில் தோன்றுகிறதோ, எதை அவன் சொல்லால் விளக்குகின்ருனே, எதை அவன் செயலால் நிறைவேற்றுகின்ருனே அது யாண்டும் தர்மமாகவே இருக்கும்.

மூன்று நெருக்கடிகளில் ராமன் தன்னுடைய பாணத்தைக் கையாண்டான். முதன் முதல் பரசுராமனேடு புரிந்த போராம். அதன் விளைவாகப் பரசுராமன் திருந்தியமைந்தார். இரண்டாவது தடவை ஸ்ரீராமன் தன் அம் பைக் கையாண்டது வாலியின் மீதாம். அதன் விளைவாக அவனும் மனம் திருந்தி அமையப் பெற்ருன். அவன் மனம் திருந்தியதற்குச் சான்று ஸ்ரீராமன் செயலை அவன் பாராட்டிய தாம்: "ஓ ராமா, நீ கருணுகரன். உன் செயலை உள்ளபடி அறிந்துகொள்ளுதற்கு முனிவர் களுக்கே முடிகிறதில்லை. அப்படியிருக்க நான் எப்படி உன்னை அறிந்துகொள்ளமுடியும்? உனக்குரிய ராஜ்ஜியத்தை உன் தம்பிக்கும் என் தம்பிக்குக் கிஷ்கிந்தை ராஜ்யத்தையும் தந் துள்ளாய். நீ என்மீது காட்டியது மறக்கருணை. அழிந்துபட்டுப்போகாத ராமராஜ்யம் என்னும் அருள் நிலையை நீ எனக்குத் தந்துள்ளாய்! உன் கருணையை என்னென்பேன்!"

விவேகானந்தர் கடிதத்தில் கூறியருளிய கருத்து -19

சென்னையிலிருந்த அன்பர் ஒருவருக்கு அமெரிக்காவிலிருந்து சுவாமி விவேகானந்தர் எழுதிய கடிதத்தின் கருத்துக்களாவன: இந் நாட்டிலே சர்வமத மகாசபை ஒன்று துவக்கப் பெற்றது பாராட்டுதற்குரியதாம். மதங்கள் அனைத்திடத்தும் அந்நாட்டவர்கள் அபிமானம் வைத்திருந்தது அத்தகைய மகாசபையைக் கூட்டியதற்குக் காரணம் என்று நாம் ஏமாற்ற மடையலாகாது. உலகிலுள்ள மதங்களனைத் திலும் தலைசிறந்தது கிறிஸ்தவ மதம் என்னும் எண்ணத்தை அடிப்படையாகக்கொண்டே அது ஆரம்பிக்கப்பட்டது.

அந்த எண்ணம் அமெரிக்காவில் உரு வெடுத்த பொழுதே கத்தோலிக்கர்களுக்கிடை யில் அதைக்குறித்து ஆட்சேபம் ஒன்று கிளம்பி யது: உலகத்தில் இருப்பது ரோமன் கத்தோ லிக்க மதம்ஒன்று தானே. அதினின்று பிரிந்து போன ப்ராட்டஸ்டண்டு மதத்தையே நாம் அங்கிகரிப்பதில்லை. மதத்தைப் பற்றிய உண்மை இவ்வாறு இருக்கையில் சர்வமத ஆராய்ச்சியைப்பற்றிய சபை ஒன்று எதற்காக?

பிறகு இந்து மதத்துக்கு அச்சபையில் இடம் கிடைத்தது தெய்வாதீனமாம். இந்துக்களாகிய நாம் இன்றைக்கும் இந்து மதத்தை ஒரு கட்டு மானத்தில் உட்படுத்தி வைக்கவில்லை (organised religion). அதற்கிடையில் சென்னை மாணுக்கர்களுடைய உற்சாகத்தால் தூண்டப் பெற்றவனாக நான் இங்கு வந்து சேர்ந்தேன். அப்படிச் செய்தது பிழை என்று நான் இந்தி யாவில் இருந்தபொழுது எனக்கு விளங்க வில்லை. அமெரிக்கா வந்த பிறகே ஒவ்வொரு நாட்டிலுமுள்ள (rules and regulations) சட்ட திட்டங்களும் நடைமுறையைப்பற்றிய உட் பொருளும் எனக்கு விளங்குவதாயிற்று.

அமெரிக்கவாசிகள் ஒரு புது உலகைச் சேர்ந் தவர்கள். சிறப்புக்கள் பல இப்புதிய உலகில் உள. இக்காலத்திய அமெரிக்கப்பொதுமக்கள் பரந்த மனப்பான்மை படைத்தவர்களாயிருக்கி ருர்கள். ஆகையினுல்தான் அவர்கள் துணிந்து சர்வமத மகாசபையைக் கூட்டினுர்கள். இந் நாட்டிலே வசித்து வருகின்ற இங்கர்ஸால் என் னும் பரந்த மனப்பான்மையுடைய ஒருவரைச் சந்தித்துப் பேசினேன். அவர் என்னிடம் இயம்பியதாவது: ''கடந்த இருபது வருஷத் திற்குள் அமெரிக்காவின் மனப்பான்மை பெரி தும் முன்னேற்றமடைந்திருக்கிறது. இந்திய ராகிய தாம் இருபது வருஷங்களுக்கு முன்பு இந்நாட்டினுள் வந்து இப்பொழுது நீங்கள் புகட்டுகின்ற பரந்த கருத்துக்களைப் புகட்டி இருப்பீர்களாகில் உங்களை உயிரோடு கட்டித் தீயில் போட்டுக் கொன்றிருப்பார்கள்.''

இங்கர்ஸால் பெருமகனுர் கொடுத்துள்ள கருத்து ஒரு புறமிருக்க இன்றைக்கும் மதத் துறையிலே மக்கள் முற்றிலும் மாறிவிட்டார் கள் என்று சொல்ல முடியாது. (Dr. Barroge) டாக்டர் பரோஜ் என்பவர் இங்கு நடைபெற்ற சர்வமத மஹாசபைக்குத் தலைமை வகித்தார். உண்மையை ஆராய்தலில் நடுநிலையில் இருப் பதுதலைவர் கடமையாகும். இந்த இயக்கத் தைத் துணிந்து துவக்கியவர்கள் பரந்த மனப் பான்மை படைத்திருந்த அமெரிக்கர்கள் சில ராம். ஆனுல் சர்வமத மகாசபையைத் துவக்கிய சில நாட்களுக்குள் அவர்களுக்குள்ளும் இதைக் குறித்துப் பிணக்கு உண்டாயிற்று. இதைப் பாராட்டியவர் ஒருபுறமிருக்க மதவெறி பிடித்த மற்ருெரு சிறு கூட்டத்துக்கு இதைக் குறித்து ஐயம் மிக உண்டாயிற்று. ஏனென்ருல் உலக மதங்களுள் மிக மேலான நாகரிகம் வாய்க்கப் பெற்றிருந்தது கிறிஸ்தவ மதம் என்னும் மனக் கோட்டை படிப்படியாக அன்னவர் மனதிலி ருந்து கலைந்து போயிற்று. மேலான கொள்கை களும் பரந்த மனப்பான்மையும் சற்றேறத் தாழ உலகில் உள்ள மதங்கள் அனைத்திடத்தும் மிளிர்ந்துகொண்டிருக்கின்றன என்னும் உண் மையை இந்தச் சர்வமத மஹாசபை வெளிப் படுத்தலாயிற்று. இவையாவுக்கும் மேலாகத் தானுகவே வந்து புகுந்திருக்கும் வேதாந்தம் மற்ற மதங்களையெல்லாம் தன்னகத்து எடுத்து அடக்கிக்கொள்ளும் பரந்தபாங்குடையது என் னும் உண்மைதான் தலைமைதாங்கிய Dr. பரோ ஜுக்கே சிறிது ஏமாற்றத்தைத் தந்தது.

பண்பாட்டில் அதிவிரைவில் மேலே வந்து கொண்டிருக்கும் அமெரிக்காவானது இன்று பரந்த மனப்பான்மைபடைத்திருக்கிறது.

ஞான வெட்டியான் - 20

பண்டொரு காலத்தில் நம் நாட்டிலே சதாச்சாரம் ஒன்று நடைமுறையில் இருந்து வந்தது. அதாவது தன் வழியே நடந்து போகும் மானுடன் ஒருவன் எதிர்பாராத நிலையில் பூமியில் கழிந்து கிடக்கும் மலத்தைப் பார்த்தால் அது ஆச்சாரக் குறைவாகக் கருதப்பட்டது. அதற்குக் கழுவாய் அவன் சூரியனை இரண்டு மூன்று விநாடிநேரம் உற்றுப் பார்க்க வேண்டும். இன்றைக்கு யாது காரணத்தாலோ மனிதனுடைய மனது அறவே மாறிவிட்டது. ஊரைச் சுற்றிலும் மலம் கழிந்து கிடக்கிறது. அது குற்றமாக நம்மவர்களுக்குத் தென்படுகிறதில்லை. உலகெங்குமுள்ள நாடுகளிலே தென்படாத இந்த விபரீதக் காட்சி நம் நாட்டில் தான் சர்வ சாதாரணமாய் விட்டது. இத்துறையில் மக்களுடைய மனப்பான்மை மாறியமைவது முற்றிலும் அவசியமாகிறது.

தேசாச்சாரத்திலே மிக மட்டமானதெனக் கருதப்படும் பழக்கம் ஒன்று சீனவிலே நாடெங்கும் நடைமுறையில் இருந்து வருகிறது. அதாவது அந்த நாட்டில் சாகுபடி செய்து வரும் கிருஷிகர்கள் வீடு வீடாகச் சென்று அந்த வீட்டு மக்கள் கக்கூஸ்களில் கழியும் மலஜலத்தை இக்குடியானவர்கள் ஒப்பந்தமாக விலைக்கு வாங்கிக்கொள்கிறார்கள். அது மட்டுமன்று. அந்தக் கக்கூஸைக் கழுவி சுத்தப்படுத்தி வைப்பதும் ஒப்பந்தக்காரனுடைய கடமையாகின்றது.

நம் நாட்டிலே ஏராளமாகப் பணம் செலவு செய்து வசதியுடன் குடியிருப்பதற்கான வீடுகளும் மாளிகைகளும் கட்டுகிறார்கள். வீட்டார் ஒருவரைப்பற்றிவிசாரித்தால் அவர் கொல்லைக்குப் போயிருக்கிறார் அல்லதுவெளிக்குப் போயிருக்கின்றார்என்னும் விடை வந்தால் அம்மனிதர் மலஜலம் கழித்தற் பொருட்டுத்தமக்குச்சொந்தமல்லாத இடத்தைப்பயன்படுத்துதற்பொருட்டு வெளியே போயிருக்கிறார் என்பது அவ்விடையின் உட்பொருளாகிறது. மனபரிபாகத்தில் நாம் எவ்வளவு தூரம் இத்துறையில் கீழே வந்துள்ளோம் என்பதற்குச் சான்று இத்தகைய பழக்கவழக்கங்களேயாம். நம் நாட்டில் நாம் மாளிகை கட்டுவோம். ஆனல் கக்கூஸ் கட்டமாட்டோம். ஆனல் சீனக்காரனோ தான் கட்டும் வீட்டின் தகுதிக்கேற்ற கக்கூஸைக் கட்டிய பிறகு விடுகட்ட ஆரம்பிப்பான். நம் நாட்டுக்கும் சீனவுக்கும் இடையிலே வீடுகட்டுவதைப் பற்றிய மாறுன பழக்கம் இதுவேயாம். உலகிலுள்ள மக்களுள் ஏற்றுக்கொண்ட கூலிக்கேற்றவாறு கண்ணும் கருத்துமாக உழைப்பவன் சீனக்காரன் ஒருவனேயாம். ஆகையினல் அந்நாட்டிலே யாண்டும் உத்தியோக லக்ஷ்மி குடியிருந்து வருகின்ருள்.

1926 ஆம் வருஷம் H. G. வெல்ஸ் என்னும் பேரறிஞர் இயற்றியுள்ள 'The Science of life' 'வாழ்க்கைத் தத்துவம்'என்னும் நூலிலே அரிய கருத்து ஒன்றைத் தெரிவிக்கின்ருர். அதாவது நாகரிகம் என்னும் பெயரால் உலகெங்கும் மக்கள் கழிக்கும் மலமும் ஜலமும் கடலுக்குப் போகிறது. அதன் விளைவாகப் பூமியின் தரம் கீழே போகிறது. மலத்தையும் ஜலத்தையும் வீண்படுத்தாது முழுதையும் எருவாக மாற்றிப் பூமியைப் பண்படுத்தும் திறமை சீன தேசம் ஒன்றில்தான் இருக்கிறது. அதன் விளைவாக அந்த நாட்டிலே குறைந்தபட்சம் 400 கோடி ரூபாய் வருவாய் வருகிறது என்று அந்நூலிலே அந்த அறிஞர் வெளியிட்டிருக்கிருர். நம்மவர் இதில் கருத்தைச் செலுத்துவார்களாக.

உலகெங்குமுள்ள நாடுகளுள் சீன தேசம் முயற்சிக்கு இலக்காக இலங்குகிறது. உலக ஜனத்தொகையில் முன்னணியில் இருப்பது சீன. உலக ஜனத்தொகையில் இரண்டாவது இடம் பெறுவது இந்தியா. முயற்சியற்றவர்களாய், வறுமை நோய்க்கு உட்பட்டவர்களாய், குற்றுயிர் உற்று வாழ்ந்திருப்பவர்கள் இந்தியர்கள். உடல் திட்பம் வாய்க்கப் பெற்றவர்களாய் உழைப்பே வடிவெடுத்தவர்களாய் பாட்டாளிகளாய்க் காட்சி கொடுப்பவர்கள் சீனர்கள். அறிவுத்துறையிலும், ஆத்மிகத் துறையிலும் முன்னணியில் இருக்கும் நம் நாடு பொருளாதாரத்துறையில் பின்னணியில் கிடப்பதற்குக் காரணம் உழைப்பின்மையும் சோம்பலுமாம். உழைப்பிற்கேற்ற ஊதியம் பெறுவது அருள்துறைக்கு உரிய கோட்பாடு என்பதை நம் நாட்டு மக்கள் மறந்துவிட்டார்கள்.

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம்

178. श्रीमान् ஸ்ரீமான் — ஈஸ்வரத் தன்மை யாகிய திருவுடன் கூடியவர்.

திரு என்னும் தமிழ்ச் சொல்லும் ஸ்ரீ என்னும் சம்ஸ்கிருதப் பதமும் பொருளில் ஒன்றே யாம். அழகு என்பது ஒரு பொருள். பரம்பொருளின் சாந்நித்தியத்தில் யாண்டும் அழகு திகழ்கிறது. வடிவு அழகு, ஓசை அழகு, சொல் அழகு, சீலத்தின் அழகு இங்ஙனம் பிரபஞ்சம் முழுதும் அழகு மயமாய் மிளிர்ந்து கொண்டிருப்பது ஆராய்ச்சி செய்பவனுக்கு வெளிப்படையாம். தெய்வத்துக்கு அமைந்துள்ள சொரூப லக்ஷணங்களுள் ஒன்று சௌந்தரியம் அல்லது அழகு என்பதாம்.

ஆத்ம சாதனத்தில் ஈடுபட்டுப் படிப்படியாக அகங்காரத்தை ஒழிக்கின்றவன் தெய்வத்துக்கு நிகராக ஸ்ரீமான் ஆகின்றான். அவனிடம் மிளிர்வது மேனியழகு ஒன்றுமட்டுமன்று. அன்னவன் ஒழுக்கமே வடிவெடுத்தவனாகின்றான். அந்த ஒழுக்கத்தில் நாம் காணும் அழகே தெய்வ சம்பத்தாம்.

179. अमेयात्मा அமேயாத்மா — வால் அறிஞன்.

எங்குச் சூரியனுடைய சாந்நித்தியம் உள்ளதோ அங்கு வெளிச்சத்தையும் வெப்பத்தையும் காண்கின்றோம். சூரியனிடத்திருந்து அவனுடைய சொரூபமாக இலங்குகின்ற வெப்பத்தையும் வெளிச்சத்தையும் பிரித்தெடுக்க முடியாது. அதே பாங்கில் பரம்பொருளினுடைய சாந்நித்தியம் பேரறிவு மயமாக எங்கும் பிரகாசித்துக்கொண்டிருப்பது வெளிப்படை. ஆதலால் பரமனை உபாசிப்பவர்களுக்கு நுண்ணறிவும் நல்லுணர்வும் தானாகவே வந்து அமைகின்றன.

180. महाद्रिधृक् மஹாத்ரித்ருக் — மலையைத் தாங்கியவன்.

மஹாதேவனைப் பற்றிய பழமொழி ஒன்று உண்டு. அதாவது மலையை விழுங்கிய மஹாதேவன்.

ஜடப்பொருள்களுள் மிக உறுதியானது மலை. உயிர்வகைகளுள் மிக மெல்லியது எறும்பு. எறும்பு ஊறக் கல் குறையும் என்பது மற்றொரு பழமொழி. ஆகவே இயற்கையினிடத்து அரிய பெரிய செயல்கள் ஓயாது நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. அவைகளுள் வியப்புக்குரியவை கோவர்த்தனகிரியைக் கிருஷ்ணன் தாங்கியதும் மேருமலையைத் தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தபொழுது வாசுகி என்னும் ஸர்ப்பம் தாங்கியதுமாம். ஸ்ரீ ராமன் கடலைக் கடந்து இலங்கையை எட்ட முயன்றபொழுது அவனுக்குப் பணிவிடை பண்ணிய வானரங்கள் மலைகளைக் கொண்டு வந்து பாலங்கட்டின. அந்த அரிய செயலில் அணிலும் கலந்து கொண்டது. தன் வாலைக்கடல்நீரில் நனைத்து அதில் ஒட்டியிருக்கும் கடல்கரை மண்ணைக் கொண்டு வந்து போட்டுப்பரம்பொருளுக்குச் சேவை புரிந்தது. பரம்பொருள் சேவையில் பெரியது சிறியது கிடையாது. உள்ளன்போடு இயற்றுகின்ற பணிவிடையை இறைவன் அகமகிழ்வோடு ஏற்றுக் கொள்கிறான். இக்கோட்பாட்டை ஆத்மசாதகர்கள் யாண்டும் கருத்தில் கொண்டிருப்பார்களாக.

181. महेष्वासः மஹேஷ்வாஸ: பெரிய வில்லாளி. அரிய பெரிய செயல்களைச் செய்து சாதிக்கும் வல்லவன் ஒருவனுக்கு வீரம் ததும்பிய வில்லாளி என்பது ஒரு பெயர்.

இக்காலத்திய பௌதிக விஞ்ஞானம் இத்துறையில் பெரிய முன்னேற்றம் அடைந்திருக்கிறது. சான்று ஒன்று எடுத்துக் கொள்வோம். ஒருநாடு மற்றொரு நாட்டின்மீது படையெடுத்துப்போகிறது. போகின்ற வழியிலுள்ள வனந்தரம் ஒன்றை நவீன சேனை கடந்தாக வேண்டும். அதன் பொருட்டு நாம் கையில் புல்லைப் பிடுங்குதற்கு நிகராக மரங்களைப் பிடுங்கித் தள்ளும் இயந்திரங்கள் உள. கற்பாறையைச் சுக்கல் சுக்கலாய் உடைத்துத்தள்ளும் இயந்திரங்கள் உள. உருண்டோடிவரும் கோட்டைக்கு நிகரான நாசகாரி இயந்திரங்கள் உள. அவை யாவற்றையும், பாலமில்லாதஒரு மகா நதியைக் கடந்து செல்லுவதற்கான உபாயங்களையும் நவீனப் பௌதிக விஞ்ஞானம் கையாளுகிறது. இத்தனை விதமான அதிசயங்களுக்கிடையில் மனிதன் சாந்தியைக் கண்டிலன். அதற்கு மாறாக எதிரியின் எதிர்ப்புச் சக்தி பயம்

வளர்த்து வருகின்றது. நவீன முன்னேற்றத்தின் விளைவாக நாம் காணும் காட்சி இதுவாம்.

இதற்கு நேர்மாருக இறைவனைப் பெரிய வில்லாளி என்கின்ரேம். அதன் உட்பொருளை ஆராயுமிடத்து ராமபாணம் வீண் போகாது என அது முடிவு பெறுகிறது. இத்தகைய அதிசயங்களைச் செய்து சாதிப்பதோடுகூட மனிதனுடைய மனதை ராமபாணம் திருத்தியமைக்கிறது. இதுவே ஈசனுடைய செயலில் உள்ள பேரதிசயமாம்.

182. महीभर्ता மகீபர்த்தா— பூமியைத் தாங்குபவன்.

முன்பு ஒரு காலத்தில் ஜலப்பிரளயம் ஏற்பட்டுப் பூமி அதனுள் மறைந்து போயிருந்தது. இது புராணவரலாறு. அப்பொழுது பகவான் பன்றி வடிவெடுத்து நீரினுள் மூழ்கி அதை மேலே கொண்டுவந்து இப்பொழுதும் அந்தப் பூமியைத் தாங்கிக்கொண்டிருக்கிருர் என்பது அதே புராணவரலாறு ஆகும். இக்கோட்பாட்டை ஆராய்ந்து பார்க்குமிடத்து ஆகர்ஷண சக்தியானது ஒரு போக்கில் அந்த வரலாற்றின் வாயிலாக விளக்கப்படுகிறது. ஆகர்ஷணம் (**Gravitation**) அல்லது ஈர்ப்புச் சக்தியின் வாயிலாக அண்டகோடிகள் அனைத்தும் அதனதன் இடத்தில் நிலைபெற்றிருந்து ஒழுங்காக இயங்கி வருகின்றன.

183. श्रीनिवास ஸ்ரீனிவாஸ — ஸ்ரீ என்னும் சொல் லக்ஷ்மி தேவியைக் குறிக்கிறது. ஸ்ரீநிவாஸ: என்னும் சொல்லில் அவள் நன்கு வீற்றிருக்கிருள் என்னும் கருத்து அடங்கி இருக்கிறது. அக்னியை விட்டு எங்ஙனம் வெப்பத்தைப் பிரிக்க முடியாதோ அங்ஙனம் ஸ்ரீதேவியும் நாராயணனும் இணைபிரியாதமூர்த்திகளாம். நாராயணமூர்த்தியின் மார்பிலே வீற்றிருந்து கொண்டு சர்வகாலமும் அவனுடைய விபூதியாக அவள் இலங்கி வருகிருள் என்னும் கருத்து இந்த நாமத்தில் அடங்கியிருக்கிறது.

184. सतां गतिः ஸதாம் கதி: — நல்லார்க்கு யாண்டும் துணைபுரிபவர்.

பிரபஞ்சத்தில் வாழ்ந்திருக்கும் உயிர்கள் அனைத்தும் ஒரே பாங்குடையவைகள் ஆக மாட்டா. நல்லவர்கள் கெட்டவர்கள் ஆகிய இருவிதத்தாரும் வாழ்ந்திருக்குமிடம் இவ்வையகம். இந்த இரு கூட்டத்தாருள் பகவான் யாண்டும் நல்லவர்களைக் காக்கவும் அவர்களுடைய முன்னேற்றத்தில் கருத்தை வைக்கவும் ஈடுபட்டுள்ளார். சான்று ஒன்று எடுத்துக் கொள்வோம். பாண்டவர்கள், கௌரவர்கள் ஆகிய இரண்டு தரத்தாருள் பாண்டவர்கள் எப்பொழுதும் பரமனையே சார்ந்திருந்து நன்னெறி பிறழாது வாழ்ந்திருந்தார்கள். ஆதலால் கிருஷ்ண பரமாத்மா அவர்களைப் பாதுகாத்து வைத்திருத்தலிலும், அவர்களுடைய முன்னேற்றத்திற்கு ஏதுவான முறைகளை வகுத்து வைத்தலிலும் தம் கருத்தைச் செலுத்தி வந்தார்.

185. अनिरुद्धः அனிருத்த: — யாராலும் தடுக்க முடியாத வல்லமை படைத்தவன்.

பரம்பொருள் இடையிடையே பூவுலக நன்மைக்காக வடிவெடுத்து வருகின்ருர். அங்ஙனம் அவர் வடிவெடுத்து வருவதும் உலகக் கிருத்தியங்களை ஒழுங்காக நடாத்துவதும் அவருடைய அரிய பெரிய திட்டமாகிறது. சான்ருென்று எடுத்துக்கொள்வோம். இம் மண்ணுலகிலே பண்டொரு காலத்தில் கம்சன் என்னும் பெயர் தாங்கிய கொடிய அரசன் ஒருவன் இருந்தான். அவனுடைய கொடூரத்தன்மையை அழித்துத்தள்ள பகவான் திட்டமிட்டு மண்ணுலகிலே மானுடனுக அவதரித்து வந்தார். அத்தகைய ஈஸ்வர சங்கல்பத்தை அழித்துத்தள்ள கம்சன் எவ்வளவோ முயன்ருன். ஆயினும் அவனுடைய திட்டம் ஒன்றும் பலிதமாகவில்லை. கடவுளால் காப்பாற்றப்படுபவரை யாரே அழிக்க வல்லவர்! பகவானுடைய திட்டத்துக்கு மாருக நடந்துகொள்பவனை யாரே காப்பாற்ற வல்லவர் என்பது இறைவனுடைய பெரிய திட்டமாம்.

186. सुरानन्दः ஸுரானந்த: — தெய்வீக இயல்பு படைத்தவர்களை மகிழ்விப்பவன்.

உலகிலே வாழ்ந்து வரும் மக்களுள் நல்லாரையும் பொல்லாரையும் பாகுபடுத்துவதுமிக எளிது. சுரர்கள் அல்லது தெய்விக இயல்பு படைத்தவர்கள் நல்லார்கள் எனப்படுகின்றனர். அவர்கள் எக்காரணத்தை முன்னிட்டும் நல்வழியிலிருந்து பிசகாது வாழ்ந்து வருகின்ருர்கள். அதை முன்னிட்டு அன்னவர்கள் வாழ்ந்து வரும் வாழ்க்கையும் ஆனந்தமயமாகத் திகழ்கின்றது.

தாயுமானவர் நாட்டைக் காப்பாற்றிய முறை

பதினெட்டாம் நூற்றுண்டில் தமிழ் நாட்டில் வாழ்ந்து வந்த தாயுமானசுவாமி தம் மண் உலக வாழ்நாள் முற்றுப்பெறுதற்கு முன்பு சிறிது காலம் ராமேஸ்வரத்தில் வசித்திருந்தார். அப்பொழுது பரங்கியர் கப்பல் ஒன்று திடீரென்று ஆங்குத் தோன்றியது. பரங்கியர் சிலர் பண்டம் மாற்றும் முறையில் அத்தீவுக்கு வந்து நடமாடிக்கொண்டிருந்தனர்.

வெளிநாட்டவர்களாகிய அப்பரங்கியர்கள் வந்த ஒருவாரத்திற்குள் இராமேஸ்வரத் தீவின் காட்சி மாறியது. இந்திய ராணுவ அதிகாரி ஒருவர் படைதிரட்டும் செயலில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார். நாள்தோறும் இருபது பேர்களுக்குக் குறையாமல் இந்திய இளைஞர்கள் அத்தீவுக்குள் வந்து படையில் சேர்ந்தனர். சிலம்பப் போர், கத்திச் சண்டை, வேல் வீசுதல், முதலிய பயிற்சிகள் மும்முரமாக நடைபெற்றுக்கொண்டிருந்தன.

இக்காட்சியைக் கானலுற்ற பரங்கியர் தலைவர் ஒருவர் இந்திய ராணுவத் தலைவரிடம் வந்தார். இருவருக்குமிடையில் முக்கியமான பேச்சுவார்த்தை நடந்தது.

பரங்கியர் தலைவர்:"இந்தப்புண்ணியஸ்தலத்தில் ஆன்மீகப் பயிற்சிக்குப் பதிலாக ராணுவப் பயிற்சி இளைஞர்களுக்குத் தருவது ஏன்?"

இந்திய ராணுவத்தலைவர்: "வெளி நாட்டினின்று வந்துள்ள நீங்கள் பண்டம் மாற்றுதலை அதிவிரைவில் முடித்துக்கொண்டு இத் தீவை விட்டு வெளியேகுங்கள். அப்படியல்லாது இங்குக் குடிபுகுவது உங்கள் நோக்கம் என்ருல் நாங்கள் அதற்கு அனுமதி தரமாட்டோம். உங்கள்கப்பலில் உள்ள போர் வீரர்களிடம் வெடி மருந்து, துப்பாக்கி, (Fire arms) இருக்கும் பரியந்தம் நாங்கள் மறைந்து இருந்து தாக்குவோம். உங்களைத் தாக்குதலில் எங்களுக்கு உயிர்ச்சேதம் எவ்வளவு ஏற்பட்டாலும் அதற்கு அஞ்சமாட்டோம். வெடி மருந்தின் வேகம் தணிந்தான பிறகு கப்பலில் வந்துள்ள பெயர்வழிகள் ஒருவன் கூட மிஞ்சமாட்டான். அதற்குத் தான் இங்கு இந்திய இளைஞர்களுக்கு ராணுவப் பயிற்சி தந்து வருகிறோம்."

இப்பேச்சு வார்த்தை நடைபெற்ற அன்று இரவே அங்கு வந்திருந்த கப்பல் புறப்பட்டு மாயமாய் மறைந்து போயிற்று.

மந்திரிக்கழகு வரும் பொருள் உரைத்தல் என்பது ராஜ தந்திரம். திடீரென்று இராமேஸ்வரத்தில் தென்பட்ட ராணுவ அதிகாரி வேறு யாருமல்லர். அங்கு வசித்து வந்த தாயுமான சுவாமிகள் தாமே ராணுவ அதிகாரியாக மாறினர். இராமநாதபுரம் இராஜாவிற்கு அங்கு வந்திருந்த பரங்கியர் நோக்கத்தைத் தெரிவித்தார். நாள்தோறும் இளைஞர்களைத் திரட்டி கத்தி, வேல், சிலம்பு முதலிய ஆயுதங்களுடன் இராமேஸ்வரத்திற்கு அனுப்பி வைக்கும்படி வேண்டிக்கொண்டார். இராமநாதபுரம் இராஜாவும் அவர் வேண்டுதலை நிறைவேற்றினர். தாயுமான சுவாமிகள் முன்பு திருச்சிராப்பள்ளியில் இருந்த அரசாங்கத்தில் முக்கியமான இடம் பெற்று ஆட்சி புரிந்து வந்தார். ஆங்கு அவர் பெற்றிருந்த பயிற்சியை இராமேஸ்வரத்தைப் பரங்கியர் கையில் அகப்படாது காப்பாற்றப் பயன்படுத்தினர்.

சந்நியாச ஆச்ரமத்தை ஏற்றுள்ள நல்லான் ஒருவன் எக்காரணத்தை முன்னிட்டும் அதினின்று வழுவலாகாது என்பது ஐதிகம். மற்றுத் தாயுமானவர் தாற்காலிகமாகத் தாம் பூண்டிருந்த துறவறத்தை மறைத்து வைத்து விட்டு ராணுவ அதிகாரி போன்று நடந்துகொண்டது கீழ்நிலைக்கு இறங்கியது ஆகாது. நாட்டிற்கு ஆபத்து வந்தால் சந்நியாசி ஒருவன் நாட்டைப் பாதுகாப்பதற்கு முயல்வதில் தோஷம் ஏதுமில்லை என்பதும் ஐதிகம்.

தாயுமானசுவாமிகள் இராமேஸ்வரத்தில் அப்பொழுது இருந்திருக்காவிட்டால் அப்புண்ணிய ஸ்தலத்தைப் பரங்கியர்கள் கைப்பற்றி இருந்திருப்பார்கள். அதன் விளைவு விபரீதமாக இருந்திருக்கும்.

இந்த வரலாற்றை இராமநாதபுரம் இராஜ குடும்பத்தைச் சேர்ந்த சிலர்தாம் அறிந்திருந்தனர். தாயுமானவர் வரலாற்றை எழுதியவர்கள் பலருக்கு இச்செய்தி இதுகாறும் எட்டவில்லை. முக்கியமான இந்நிகழ்ச்சியை உலகம் அறிய வேண்டும் என்று எண்ணி ஈண்டு இதைப் பிரசுரிக்கிறோம்.

போசலபாவா சரிதம்

(223 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போசலபாவாவின் பக்தியைப் பாராட்டிப் பகவான் கூறியதாவது : "தூயமனம் படைத்தவனே! உன் பக்தி என்னும் கயிற்றால் எம்மைப் பிடித்து விட்டாய். நாமதேவர் போன்ற அடியார்கள் கூட்டத்தை நீ சேர்ந்தவன் ஆவாய். உன் கைப்பட்ட உணவு உப்பு இல்லாததாக இருப்பினும் அது மேன்மை மிக உடையது ஆகும். பகட்டுக்காகப் பக்தி பண்ணுபவர்கள் ஆடம்பரச் செயலில் ஈடுபடுவார்கள். அவர்களிடம் உண்மையான பக்தி இராது. அவர்கள் செய்கின்ற தானதர்மங்கள் யாவும் ஆரவாரம் படைத்தவைகளாக இருக்கும். உண்மையான பக்தி உள்ளவர்கள் செய்கின்ற செயல்கள் பகவானுக்கு இனிமையுடையனவாக இருக்கும். கண்ணப்பர் செருப்பு அணிந்த காலை என்மீது வைத்தது எனக்கு இனிமையாக இருந்தது. கண்ணப்பன்போன்று பக்தி உள்ளத்துடன் நீ அளித்த கோதுமை ரொட்டி எனக்கு இனிமையாக இருந்தது. பகட்டுடன் செய்யும் அன்னதானம் எப்படி இருக்கும் என்பதை உனக்குக் காட்டித் தருகிறேன். நீ என்னுடன் வா" என்று கூறிப் பகவான் போசலாபாவாவை ஒரு தனவந்தன் அன்னதானம் செய்து கொண்டிருந்த இடத்திற்கு அழைத்துக் கொண்டு போனார்.

போசலபாவாவை ஆங்கு ஓர் இடத்தில் நிறுத்தி வைத்து விட்டுப் பகவான் மட்டும் கிழப் பிராமணனாக வடிவெடுத்துத் தள்ளாடிய வண்ணம் பந்தலுக்குள் நுழைந்தார். வாயிலில் நின்று கொண்டிருந்த குண்டன் ஒருவன் கொடிய பார்வையுடன் "கிழப்பிராம்மணனே! உனக்கு இங்கு என்ன வேலை?" என்று அதட்டினன். அவன் சொன்னதைப் பொருள் படுத்தாமல் அவர் உள்ளே நுழைந்தார். உள்ளே சென்ற பிராம்மணன் ஆங்குள்ள முக்கியஸ்தரைப் பார்த்து "புண்ணியவானே! நான் சாப்பிட்டுப் பல நாட்கள் ஆகிவிட்டன. இன்றாவது நீங்கள் தரும் அன்னத்தை உண்டு பசி ஆறுவேன்" என்றார். அம்முக்கியஸ்தர் "இந்நேரம் வரையில் அதிதிகள் வரலாம் என்று காத்திக் கொண்டிருந்தோம். அப்போது நீ எங்கே போனாய்? இங்கு ஆயிரம் பேருக்குத்தான் அன்னம் தயாராகி உள்ளது. நாங்கள் போட்ட திட்டப்படி எண்ணிக்கை பூர்த்தியாகி விட்டது. இப்பொழுது நீ வந்து குழப்பம் செய்ய வேண்டாம்; மரியாதையாக வெளியே போய் விடு" என்றார். "புண்ணியவானே! ஆயிரம் பேருக்கு உணவு தயாரித்திருக்கும் போது என்னுடைய சிறு வயிற்றுக்கு ஒரு கவளம் உணவு கிடைக்காதா? எனக்குப் பசி மிகவும் அதிகம். இந்த இடத்தைவிட்டு இனி நகர முடியாது. என்று கூறி அங்கேயே உட்கார்ந்துவிட்டார். இவருடைய பிடிவாதத் தன்மையை அன்னதானம் செய்யும் அன்பரிடம் சென்று கூறினர்கள். அன்னதானம் செய்பவர் அதைக் கேட்டுக் கோபம் அடைந்தார். வாயில் காப்பாளனைக்கொண்டு அக்கிழவனைவெளியே தள்ளவும் செய்தார். "பாண்டுரங்கா! உம் திருவுள்ளம் இத்தகையதா?" என்று அப்பிராம்மணன் கூறிக்கொண்டு போசலாபாவா இருக்கும் இடத்துக்குப் போனார். "படாடோபத்தோடு செய்யும் தானதர்மம் எத்தகையது என்பதை இப்பொழுது நீ அறிந்துகொண்டாய் அல்லவா? இத்தகைய அன்னதானம் ஏழைகளின் பசியைப் போக்காது. சோம்பேறிகளின் வயிற்றை நிரப்புவனவாகவே அமையும். ஆகவே உன் போன்ற பக்தர்களுடைய பிரசாதமே எனக்கு ஏற்புடையதாகும். எனவே நீ இப்பொழுதே வீட்டுக்குச் சென்று நான் உண்டது போக மீதியுள்ள ரொட்டியை உன் மனைவி மக்களுக்குத் தந்து அவர்களையும் விரதத்தை முடிக்கும்படி செய்வாயாக" என்றார்.

போசலாபாவா ஆனந்தம் அடைந்தவராய்ப் பகவானைக் குறித்துக் கீதங்கள் பாடிக்கொண்டு உற்சாகமாகவும், வேகமாகவும் நடந்து சென்றார். அப்படி விரைவில் நடந்துபோகும் அவரை ஒருவன் சந்தித்து வணக்கம் செய்து பகர்ந்ததாவது : "பக்தசிகாமணியே! ஏன் இவ்வளவு வேகமாக நடந்து செல்கின்றீர்? உம் உடம்பு முழுவதும் வியர்வையால் நனைந்து விட்டது. உம்மைப் போன்று நானும் ஒரு விவசாயி. இவ்வூரில் பயிர்த்தொழில் செய்து பாண்டுரங்

கனின் கிருபையினல் சிறிது முன்னேறி இருக்கின்றேன். பக்தர்களைச் சேவிப்பதும் அவர்கள் பாடும் கீதங்களைக் கேட்பதும் எனக்குப் பரமானந்தமாக இருக்கும். நான் இங்கு இருந்தபடியே பண்டரிபுரத்துக்குச் செல்லும் பக்தர்களையும், பாண்டுரங்களைத் தரிசித்துத் திரும்பி வரும் பக்தர்களையும் காணும் பாக்கியம் பெற்றிருக்கின்றேன். நாமதேவர், துக்காராம் முதலிய பக்தர்களையெல்லாம் தரிசித்த பாக்கியம் பெற்றிருக்கின்றேன். இதோ என் தோட்டம் பக்கத்தில்தான் இருக்கிறது. அதில் மா, பலா, வாழை, தெங்கு, கமுகு முதலிய மரங்கள் நிறைந்திருக்கின்றன. மலர்ச்செடிகளும் ஆங்கு வளர்ந்திருக்கின்றன. குளிர்ந்த ஜலமுடைய தடாகமும் ஆங்கு இருக்கிறது. அத்தடாகத்தின் பக்கத்தில் என்குடில் அமைந்திருக்கிறது. இவ்வழியாகப் போகும் பக்தர்களை அழைத்துக் கொண்டு போய் அவர்களுக்கு உபசாரம் செய்வதே என் வாழ்வின் முக்கிய நோக்கமாகும். தங்களைப் போன்ற பக்தர்களை உபசரிப்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்." தோட்டக்காரனின் இனிய மொழிகளைக் கேட்ட போசலபாவா அவனுடன் அவன் குடிலுக்குச் சென்ருர். அதிதிகளை எதிர்பார்த்துக் கொண்டிருந்த தோட்டக்காரனின் மனைவி தன் கணவனுடன் பக்தர் ஒருவர் வருவதைப் பார்த்து மிக்க மகிழ்ச்சி அடைந்தாள். அவரை அன்புடன் வரவேற்றுக் குடிசையில் அமரச் செய்தாள். வாசனையும் தேனும் மிகுந்திருந்த மலர்களாலும், தடாக ஜலத்தாலும், மரங்களின் அடர்ந்த நிழலாலும் அக்குடில் இன்பகரமாக இருந்தது. தம்பதிகள் இருவரும் அன்புடன் மா, பலா, வாழை முதலிய இனிய கனிகளையும் ரொட்டிகளையும் பரிமாறினர். போசலபாவாவும் உண்டு சிரமம் தீர்ந்த பின் அத்தம்பதிகளிடம் விடைபெற்றுக் கொண்டு ஊருக்குப் புறப்பட்டதும் தோட்டம் துரவுகள் யாவும் மாயமாய் மறைந்தன. இது பண்டரிநாதனுடைய மகிமை என்று போசலபாவா அறிந்து பரமானந்தம் அடைந்தவராய் வீட்டுக்குச் சென்ருர்.

நடந்த நிகழ்ச்சிகளை எல்லாம் வீட்டில் உள்ளவர்களுக்கு எடுத்து விளக்கினர். போசலபாவா தந்த ரொட்டியை அவர்கள் வாங்கி உண்டனர். அது சொல்ல முடியாத ருசியைத் தந்தது. இந்த ரொட்டி மூலம் நம்மையும் பாண்டுரங்கன் ஆட்படுத்திக் கொண்டார் என்று பரம திருப்தி அடைந்தவர்களாய்ப் போசலபாவாவுடன் சேர்ந்து பக்தியில் ஆழ்ந்து ஈடுபட்டனர்.

நாடு முழுவதும் நல்ல மழை பெய்தது. பஞ்சம் தெளிந்தது. உழவர்கள் தங்கள் வயல்களை உழுது விதை விதைத்தனர். போசலபாவா பஞ்சத்தின் பொழுது வீட்டிலுள்ள தானியத்தை உணவாகச் சமைத்து ஏழைகளுக்குப் போட்டுவிட்டார். எனவே நிலத்தில் விதைப்பதற்குக் கூட அவர் வீட்டில் தானியம் இல்லை. ஒன்றுக்கு இரண்டு மடங்கு தானியம் தருவதாகக் கூறி விதை தானியத்தைக் கடனுக வாங்கி அவருடைய நிலத்தில் விதைத்தார். அவருடைய நிலத்தில் நல்ல விளைவு ஏற்பட்டது. சோளம் விளைந்ததும் சோளக்கொல்லைக்குப் போசலபாவா காவலிருந்தார். இறைவனைக் குறித்து அவர் இனிமையாகப் பாடுவார். அவர் இனிமையாகப் பாடும்பொழுது பறவைகள் அவர் பாட்டில் லயித்திருக்கும். அவருடைய இனிமையான குரலால் பறவைகள் யாவும் அவர் கொல்லைக்கே வந்து சேர்ந்தன. அதனுல் மற்றவர்களின் கொல்லைகளில் உள்ள கதிர்கள் பறவைகளால் பாழாக்கப்படாமல் பாதுகாக்கப்பட்டன. வழிப்போக்கர்களும் அவரிடம் வந்து அவருடைய அனுமதி பெற்றுச் சோளக்கதிர்களை வேண்டியவாறு உண்டு பசி தீர்த்துக்கொண்டார்கள். பட்சிகளும், வழிப்போக்கர்களும் வேண்டியவாறு உண்டு கொல்லையைக் காலிசெய்துவிட்டனர்.

வரிப்பணம் கட்டுவதற்குக்கூட போசலபாவா வகையின்றி இருந்தார். அதிகாரிகள் வரிப்பணம் வசூலிக்க வந்தபோது தம்மிடமுள்ள பொருள் போதாமையால் அவ்வூரில் வசித்து வந்த விதவை நாகாபாயிவிடத்தில் கடன்கேட்டார். அவள் லோபத்தன்மை படைத்தவள். இரட்டிப்பு வட்டி வாங்கும் இயல்புடையவள். போசலபாவா மிகவும் ஏழ்மையானவர்; அவர் பணத்தைத் திருப்பிக் கட்டச் சக்தியற்றவர் என்று அவள் நினைத்தாள். எனவே அவருக்குக் கடன் கொடுக்க அவள் இசையவில்லை. வேறு வழியின்றிப் பணம் திரட்டுவதற்காகப் போசலபாவா வேற்றூருக்குச் சென்ருர். அவர் திரும்பி

வருவதற்குள் அவருக்காகப் பாண்டுரங்கன் வெட்டியானாக வடிவெடுத்து அவர் கட்ட வேண்டிய வரிப்பணத்தைச் செலுத்தி அவர் பேரில் ரசீதும் பெற்று வந்து போசலபாவா வீட்டில் உள்ளவர்களைக் கஷ்டத்தினின்றும் விடுவித்தார். வீராணம் கிராமத்திலிருந்து வேண்டிய பொருளைக் கடன் வாங்கி வந்த போசலபாவா வரிப்பணம் கட்டப்பட்டிருந்த தைக் கேள்வியுற்றுத் திகிலடைந்தார். பண்டரி நாதன்தான் இச்செயலைச் செய்திருப்பார் என்று அறிந்து பகவானே வெட்டியானாக வந்து இவ்வேலையைச் செய்யத் தாம் காரணமாக இருந்ததை நினைத்து வருந்தினார். பண்டரி நாதனைத் துதிக்கலானார். "அனாதரட்சகா! தேவர்களும் அவர்கள் தலைவர்களும் உமக்குக் குற்றேவல் புரிகின்றனர். ஆனால் நீர் என் பொருட்டு ஒரு வெட்டியானாக வந்து என்ன காரியம் செய்தீர்! நான் வேண்டிய பணத்தைக் கடன் வாங்கி வந்திருக்கிறேன். அதற்குள் நீர் இக்காரியத்தைச் செய்து விட்டீர். என்னால் வரிப்பணம் கட்ட முடியாமற்போனால்தான் என்ன நேர்ந்துவிடும்? மீறிப்போனால் எனக்கு ராஜதண்டனை கிடைக்கும். அதனை நான் சந்தோஷமாக ஏற்றிருப்பேன். தங்கள் திருப் பாதம் நோகத் தாங்கள் என்ன காரியம் செய் தீர்?" என்று பகவானிடம் முறையிட்டார்.

பகவான் அவருடைய பக்திக்கு இரங்கிப் பகர்ந்தாவது: "நீ கட்டவேண்டிய வரிப் பணத்தை இரண்டு இடங்களிலிருந்து கவர்ந் தெடுத்தேன். உன் வீட்டிலிருந்தும், நாகாபாய் வீட்டிலிருந்தும் அத்தொகையை நான் திரட்டினேன். எனக்கு இவ்வுலகமே சொந் தம். யாரிடத்திலிருந்து எதை எடுத்து யாருக்கு வழங்கவேண்டும் என்று எனக்குத் தெரியும். உன் காரியத்துக்காக உன்னிடத் திலிருந்த பணத்தைப் பயன்படுத்தினேன். போதாதற்கு லோபித்தனம் படைத்த நாகா பாயின் வீட்டில் பணத்தை எடுத்தேன். அவ ளுடைய பணம் ஒரு பக்தனுக்கு உதவி செய் வதில் பயன்பட்டதால் அவளுடைய உள்ளத் திலிருந்து இப்பொழுது லோபத்தனம் முழு தும் மறைந்து விட்டது. இனி அவள் தன் சொத்து முழுவதையும் நல்ல காரியத்துக்குச் செலவழித்து நற்கதி அடைவாள். அவள் நற் கதி அடைவதற்கு அவளுடைய பணம் உனக் குப் பயன்பட்டது உதவியாக இருக்கிறது. நீ முன்போல் என்மீது செலுத்தும் அன்பில் குறையாதவனாக ஒழுகி வருவாயாக."

பகவான் ஆசீர்வாதத்தைப்பெற்றுப் போசல பாவா தீவிரமான பக்தியில் ஈடுபட்டார். அவ ருடைய வீடு பஜனை மடமாக மாறியது. அவ்வூர் மக்களும் பக்கத்து ஊர் மக்களும் அவருடைய பாடல்களைச் செவிகளால் பருகி ஆனந்த மடைந்தனர். நாட்டில் நல்ல மழை பெய்தது. நாடு செழித்தது. தானியங்களைக் கொட்டி வைப்பதற்குக் களஞ்சியங்கள் போதாதவை யாகி விட்டன. எனவே போசலபாவா மக்க ளுக்குத் தானியங்களை வாரி வாரி வழங்கினர். அவர் வாரி வழங்க வழங்கத் தானியங்கள் வளர்ந்த வண்ணமாக இருந்தன.

அவர் பஜனையின் பெருமை நாடெங்கும் பர வியது. ஏராளமான ஜனங்கள் பக்தி செய் வதற்காக அவர் வீட்டுக்கு நாள்தோறும் வந் தனர். அவர் வீட்டுக்கு வந்து பஜனை செய்து விட்டுப் பால்காடு என்னும் கிராமத்தை நோக்கி ஒரு கூட்டம் ஓரிரவு சென்று கொண் டிருந்தது. அக்கூட்டத்தில் ஒருவனைப் பாம்பு தீண்டிவிட்டது. பாம்பு தீண்டியவனைத் தூக் கிக்கொண்டு போசலபாவாவின் வீட்டுக்கு வந்தனர். அவர் வீட்டில் ஒரு மூலையில் அவனை அமர்த்தி வைத்துவிட்டுப் போசல பாவாவுடன் சேர்ந்து கைத்தாளம் போட்டுக் கீர்த்தனையில் ஈடுபட்டனர். போசலபாவா பஜனை செய்யாமல் ஒருவர் அமர்ந்திருக்கிறார் என்று எண்ணி அம்மனிதன் அருகே சென்று பகர்ந்ததாவது: "அன்புடையீர்! யாவரும்பஜனை யில் ஈடுபட்டுப் பரமானந்தம் அடைந்திருக் கின்றோம். நீ மட்டும் உறங்கிக் கொண்டிருப் பது பொருந்தாது. பக்தர்கள் கூட்டம் கிடைப் பது அரிது. அப்படிக்கிடைக்கும் பொழுது அவ் அரிய சந்தர்ப்பத்தை நழுவவிட்டுவிடக்கூடாது. எனவே விட்டல் நாமம் சொல்ல எழுந்து வரு வாயாக." இங்ஙனம் அவர் கூறியதைக் கேட்ட தும் விஷம் அகன்று 'விட்டல், விட்டல்' என்று அவர்களோடு பஜனை செய்யத் தொடங்கினர் பாம்பு தீண்டப்பெற்றவர். பக்தியால் எதை யும் சாதித்துவிடலாம் என்ற துணிவு எல்லா ருக்கும் ஏற்பட்டது. (தொடரும்)

கவிதைகள் புகட்டும் தத்துவங்கள்

(பத்தாம் வகுப்பு ஆங்கிலப் பாடப்பகுதியில் உள்ள கவிதைகளின் கருத்து விளக்கம்)

[224 ஆம் பக்கத் தொடர்ச்சி]

குழந்தையும், பறவையும்

இக்கவிதையில் தாமஸ் ஹார்டி என்னும் ஆங்கிலக் கவிஞர் மனிதனிடத்திலுள்ள கொடுரத்தன்மையைச் சித்தரிக்கின்றார். மனிதனைப் பற்றி மற்ற உயிரினங்களின் மதிப்பீடு என்ன என்பதை ஒரு கற்பனை நிகழ்ச்சியின் துணையோடு விளக்க முற்படுகின்றார் அவர். இயற்கையில் நிகழும் காட்சி ஒன்றைத் தம் வருணனைக்கு எடுத்துக்கொண்டு படிப்பவருடைய உள்ளத்தில் அதைப் படம் போட்டுக் காட்டுகின்றார் கவிஞர்.

சிற்றாறு ஒன்று ஓடிக்கொண்டிருக்கிறது. அவ் ஆற்றைக் குழந்தை ஒன்று பார்த்து ரசித்துக்கொண்டிருக்கிறது. தாக சாந்தி செய்துகொள்வதற்காகச் சிறு பறவை ஒன்று ஆங்கு வருகிறது. நீளமான வாலும் மெல்லிய அலகும் கொண்ட வாக்டெயில் (wagtail) பறவை அது. அந்த வாலாட்டிப்பறவை ஆங்கு வந்து ஒரு திட்டின் மீது உட்கார்ந்துகொண்டு அமைதியாகத் தண்ணீரைப் பருகுகிறது.

அப்பொழுது பெரியகாளை ஒன்று ஊங்காரம் செய்துகொண்டு அங்கே வந்தது. அது தண்ணீரைக் கிழித்துக்கொண்டு சென்றது. அக்காட்சியைக் கண்டு அப்பறவை சிறிதும் அஞ்சவில்லை. அடுத்து ஆங்குக் கம்பீரமான ஆண் குதிரை ஒன்று தண்ணீரைக் கிழித்துக்கொண்டு வேகமாகப் பாய்ந்து ஆற்றைக் கடந்த பொழுது தண்ணீரில் பறவையை மூழ்க அடிப்பது போன்று அலைகள் எழுந்தன. அப்பறவையானது கால்களால் தத்தியும், இறகுகளை அடித்தும், உடலை நெளித்தும் தன்னைச் சமன்படுத்திக் கொண்டது. ஆனால் அந்நிகழ்ச்சி அதனை அச்சுறுத்தவில்லை.

அடுத்து மாங்கரெல் எனப்படும் கலப்பின நாய் ஒன்று பதுங்கிப் பதுங்கி அந்தக் குழந்தையைச் சுற்றிக்கொண்டு வந்தது. வாலாட்டிப் பறவை அதனை உற்றுப் பார்த்தது. ஆனால் பயந்துகொண்டு அது பறந்து போகவில்லை. அதற்கு எந்தவிதத் தடுமாற்றமும் ஏற்படவில்லை. தன்னுடைய அலகினால் நீரை முகந்துகொண்டும், இறக்கைகளைச் சுத்தம் செய்துகொண்டும், சிறகுகளைக் கோதிக்கொண்டும் அது களிப்புற்றிருந்தது.

இறுதியாக கண்ணியமான தோற்றம் கொண்ட மானுடன் ஒருவன் அங்கு வந்து சேர்ந்தான். அவன் அந்தப் பறவை இருந்த இடத்தை நோக்கித் தன் போக்கில் சென்றான். அவனைப் பார்த்ததும் பறவை கண்ணிமைக்கும் நேரத்தில் அவ்விடத்தை விட்டு எழுந்து பறந்து மறைந்து போய்விட்டது. இந்நிகழ்ச்சி அக்குழந்தையைச் சிந்தனையில் ஆழ்த்தியது.

உடல் வலிமை மிக்க காளை, குதிரை, வேட்டை நாய் ஆகியவற்றைக்கண்டு வாலாட்டிப்பறவை கலங்கவில்லை. அவ்விலங்குகள் அப்பறவையின் உயிருக்குத்தான் ஆபத்து விளைவிக்கும். ஆனால் மனிதனோ உயிருக்கு ஆபத்தை விளைவிப்பதோடு பறவையைக் கூண்டில் அடைத்து அதன் சுதந்திரத்தையும் கெடுக்க முடியும். உயிருக்கு அஞ்சாத பறவை சுதந்திரத்துக்குப் பங்கம் விளைவிக்கும் மனிதனைப் பார்த்ததும் அவ்விடத்தைவிட்டு அகன்று போய் விட்டது.

மரணத்தைக் குறித்து ஞானிகள் அஞ்சுவதில்லை. மாயை என்னும் தெய்வீக சக்தி மனிதனை மயக்கும் வலிவு வாய்ந்தது. மரணத்தைக் கண்டு அஞ்சாத ஞானியும் மாயையைக் குறித்து அஞ்சுகின்றான். மனிதன் பறவையைக் கூண்டில் அடைத்து வைப்பது போன்று மாயை மனிதனை உலக ஆசையில் கட்டுப்படுத்தி வைக்கிறது. கூண்டில் அடைபட்ட பறவை சுதந்திரத்தை இழப்பது போன்று உலக ஆசையில் கட்டுண்ட மனிதன் சுதந்திரத்தை இழக்கின்றான். சுதந்திரத்தை இழக்க எவ்வுயிரும் விரும்புவதில்லை. சுதந்திரம் பெறுவதுதான் உயிர்களின் இலட்சியம். சுதந்திரம் என்பது பிறப்பு இறப்பைக் கடந்த நிலையாகும். அந்நிலையை அடையவே எல்லா உயிர்களும் விரும்புகின்றன என்ற உண்மையைக் கவிஞன் இந்தக் கதையின் மூலம் நமக்குத் தெளிவு படுத்துகின்றான்.

ஸ்ரீமத் பாகவதம்

(சுவாமி ஸதானந்தர்)

காண்டீவம் என்கிற வில்லை ஏந்தினவனாகிய அர்ஜுனன், மிகப்பிரசித்தி பெற்ற மஹாரதனாகிய அர்ஜுனன் தன் விரோதங்களை எல்லாம் மறந்து அமைதியாக இருந்து வருகிறானா? அவனுடைய வில்லாற்றலை, வில்லாண்மையை வேடன் கோலத்தில் நேருக்கு நேர் கண்டு சிவபெருமானே மகிழ்ந்தாரல்லவா? அவன் ஆண்டவனின் பரம பிரீதியைப் பெற்றவன் அல்லவா. அவன் வில்லால் அடித்ததை ஆண்டவன் அன்புடன் ஏற்றுக்கொண்டான். ஏக காலத்தில் பல வில்களைக் கையாள வல்ல, இடையறாத அம்பு மழை பொழியவல்ல பராக்கிரமசாலியன்றோ அர்ஜுனன்! நகுல சகாதேவன் ஆகிய இரட்டையர்கள், குந்தியினால் மிகுந்த பாசத்துடன் வளர்க்கப்பட்டவர்கள், தமது மூன்று அண்ணன்மார்களாலும் கண்ணை இமை காப்பது போன்று மிகுந்த அன்புடன் காக்கப்பட்ட பாக்கியம் வாய்ந்தவர்கள், தங்கள் பிதுரார்ஜிதமான ராஜ்யத்தைப்பெற்று மகிழ்ச்சியோடு வாழ்கிறார்களா? வஜ்ஜிரதரன் ஆகிய இந்திரனுடைய வாயிலிருந்து இரண்டு கருடன்கள் அமிர்தத்தைப் பிடுங்கிக்கொண்டு பறந்துவிட்டன போன்று கொடியவனாகிய துர்யோதனனிடமிருந்து தங்கள் பங்கு ராஜ்யத்தை யுத்தத்தின் மூலம் பலவந்தமாய்ப் பெற்றிருப்பார்கள். ஆ! அபலையாகிய என் அண்ணி, குந்தி தன் குழந்தைகளுக்காகவே பாண்டுவைப் பிரிந்து வாழ்ந்து வந்தாள். ஒப்பற்ற வீரனும், ராஜரிஷியும், மஹாரதனும் ஆகிய பாண்டு தான் ஒருவனாகவே திக்விஜயம் செய்து ஒப்பற்ற ஜயங்கள் பெற்றுத் தன் வமிசத்தின் பெருமையை நிலைநாட்டினான் அன்றோ. அருமை உத்தவா! என் அண்ணன் திருதராஷ்டிரனுக்காக நான் மிகவும் கவலைப்படுகிறேன்: அவர் தாமே தம் கீழ்நிலைக்கு-நரகத்துக்கு வழி தேடுகிறார். தம் அருமைத் தம்பியின் புத்திரர்களுக்கு அவர் செய்த கொடுமை சாதாரணமன்று. அவரது நலத்தில் எப்போதும் கருத்துடைய என்னை அவர் தம் கெட்ட மக்களை அனுசரித்துத் தேசப்பிரஷ்டம் பண்ணினார். அதைக் குறித்து நான் கவலையோ ஆச்சரியமோ அடையவில்லை. ஏனென்றால் இவையெல்லாம் இப்பிரபஞ்சத்தின் நாயகன், பிரபு, என் ஆண்டவன் கிருஷ்ணனின் லீலை, திருவிளையாடல் அன்றோ. மறைப்பவனும் (திரோதானம்) அவனே, அருளுபவனும் அவனே. மக்கள் மனதை உலக ஆசையில், மோஹங்களில் தூண்டுபவனும் அவனே. மனத்தெளிவு தந்து, ஞானம் தந்து காத்தருளுபவனும் அவனே. ஆகையால் மற்றவர்கள் கண்ணில் படாமல் அவன் அருளால் எப்போதும் என் ஆண்டவனை ஸ்மரித்துக்கொண்டு சஞ்சாரம் செய்து வருகிறேன். தம்மால் அப்போதே துரியோதனனைக் கண்டிக்கவும் தண்டிக்கவும் முடியுமாயினும் என் ஆண்டவன் அப்போதைக்குக் கௌரவர்களைத் தண்டிக்காது விட்டுவிட்டார். தம்மை அடைக்கலம் புகுந்தவர்களைக் காத்தல் பொருட்டு, அவர் எத்தனை பேரரசர்களையெல்லாம்—பிறப்பு, அதிகாரம், செல்வம், செல்வாக்கு, கல்வி இவைகளை முன்னிட்டு அகங்கரித்துத் தர்மத்தையும் நேர்மை நீதியையும் புறக்கணித்துவிட்டுப் படைபலத்தால் உலகுக்குப் பேர் அபாயமாய், தீமையாய் விளங்கிய பெரிய க்ஷத்திரிய வீரர்களையெல்லாம் என் ஆண்டவன் ஒழித்துத் தள்ளினார் அன்றோ. பிறப்பும் இறப்பும் அற்ற, ஆதி அந்தமற்ற என் ஆண்டவன் மானுடனாகப்பிறப்பதும் இறப்பதும் துஷ்ட நிக்கிரஹ, சிஷ்டபரிபாலனத்துக்காக ஆகும், தர்ம சம்ரக்ஷணத்தின் பொருட்டு ஆகும். கிரியை, சலனம், செயல் அற்ற அப்பரம்பொருள் மானுட அவதாரத்தில் செய்கின்ற ஒப்பற்ற லீலைகள், செயல்கள் எல்லாம் தர்மத்துக்கு விளக்கமாக அமைகின்றன. பக்தர்கள் அவரை நினைந்து உருகி, அவருடைய வாழ்க்கைச் செயல்களை எல்லாம் நினைந்து கசிந்துருகி என் ஆண்டவனைச் சதா பிரார்த்திக்கிறார்கள். ஆண்டவனைப்பற்றி வேறு என்ன சொல்ல முடியும்? முக்குணங்களைக் கடந்த அவர் அழியும் இவ்வுடலில் ஏன் பிறப்பெடுக்கிறார்? தம்மை ஏன் இச்சரீரத்தில் தளைத்துக்கொள்ளவேண்டும்? இவ்வுடல் வாழ்க்கைக்கு இயல்பான ஏராளமான காரியங்களை ஏன் செய்ய வேண்டும்? மானுடரை நல்வழிப்படுத்த,

அவர்களைத் தம்பால் கவர்ந்திழுக்க அன்றோ என் ஆண்டவன் இங்ஙனம் செய்கிறான். தம் குழந்தைகளோடு தாய் அன்போடு விளையாடுவது போன்று ஆண்டவன் விளையாடுகிறான், பக்தர்களோடு அன்பான இணக்கம் வைக்கிறான். ஆகையால் அன்புள்ளநண்பா, பிறப்பற்றவன் பக்தர்களின், லோகபாலர்களின் பரிந்த பிரார்த்தனைக்கு இரங்கி யாதவ குலத்தில் பிறந்து புரிந்த லீலைகளை எல்லாம் பகர்வாயாக. என் ஆண்டவனைப்பற்றிச் சொல்வாயாக.

ஸ்கந்தம் 3 அத்தியாயம் 2

சுகதேவர் சொன்னது: தம் பிரபுவாகிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணரைப்பற்றி இங்ஙனம் கேட்கப்பட்ட பரமபாகவதராகிய உத்தவருக்குப் பேசமுடியவில்லை. தம் பிரபுவைப்பற்றிய பேர் எண்ணங்கள், பேர் உணர்வுகள் பொங்கி எழுந்தவராய், உணர்ச்சி வசப்பட்டவராய் அவர் பேசாதிருந்தார். அவர் ஐந்து வயதுச் சிறுவனாக இருந்தபோதே, தம் ஆண்டவனை விளையாட்டாக வழிபட்டுக்கொண்டிருக்கும் போதே, தம் தாய் உணவுக்கு அழைப்பது காதில் விழாமல் உணவைப்பற்றிய எண்ணமில்லாமல் வழிபாட்டில் மூழ்கிப் போனவராய் இருப்பார். தம் தலை நரைத்துப் பச்சை நிறம் கூட ஆகிவிட்ட இவ்வயதில் இவ்வளவு நீண்ட காலம் சிறந்த ஸ்ரீ கிருஷ்ண சேவையிலேயே தம் வாழ்நாளைக் கழித்து வந்த அவ்வுத்தமரால், பக்தியில் மேலோங்கிவிட்ட அவ்வுத்தமரால் விதுரர் தம் ஆண்டவனைப்பற்றிக்கேட்ட கேள்விக்கு உடனடியாகப் பதில் அளிக்க முடியவில்லை. அவரது மனது தம் ஆண்டவனின் திருவடிகளில் உருகிப் போயிற்று. அமிர்த வர்ஷிணியாகிய தன் ஆண்டவனின் தாமரைத் திருவடிகளில் அவர் மனது பக்தியின் மிகுதியால் நிலைத்துவிட்டது. ஒருமணிநேரம் ஒரு வார்த்தையும் பேசமுடியாது அவர் ஊமைபோன்று இருந்தார். அவரது உடல் சிலிர்த்து உடல் முழுவதும் ரோமம் குத்திட்டு நின்றது. அவரது மூடிய கண்களில் இருந்து ஆனந்த பாஷ்பம் தாரை தாரையாக வந்தது. பக்திப் பெருவெள்ளத்தில் மூழ்கி நிற்கும் இவர் ஸ்ரீ கிருஷ்ண சாக்ஷாத்காரம், என்னும் தம் வாழ்வின் குறிக்கோளை அடைந்துவிட்டார் என்பதை விதுரர் அறிந்து கொண்டார். பக்தனும் பகவானும் ஒன்றாகி விட்டனிலை. அங்கே உத்தவரின் சரீரம் உட்கார்ந்திருந்தது. உள்ளே உத்தவர் என்கிற ஜீவபோதம் போய் ஸ்ரீ கிருஷ்ண போதம்தான் இருந்தது. ஆண்டவனே! இந்த அரிய காட்சியைக் காணக் கிடைத்தது பகவானைத் தரிசித்ததற்கு நிகர். உத்தவருக்கு மெதுவாக சரீர உணர்வு வந்தது. ஸ்ரீ கிருஷ்ண லோகத்திலிருந்து அவர் மனது உடல் உணர்வுக்கு வந்தது. தம் கண்களைத் துடைத்துக்கொண்டு தழுதழுத்த குரலில் தம் ஆண்டவனின் அரிய லீலாவிநோதங்களைப் பேர் ஆச்சரியத்துடன் விதுரருக்குச் சொன்னார்.

உத்தவர் சொன்னது: ஸ்ரீ கிருஷ்ணன் என்கிற சூரியன் அஸ்தமனமான பிறகு நமது மகோன்னதமான வாழ்வு இருளில் மூழ்கிவிட்டது. காலம் அனைத்தையும் விழுங்கிக்கொண்டிருக்கிறது. இனி நமதுக்ஷேமநலனைப்பற்றி நான் என்ன சொல்லட்டும். அந்தோ, இந்தப் பூமி எவ்வளவு துரதிர்ஷ்டமானது! அதைவிடத் துர் அதிர்ஷ்டமானவர்கள் யாதவர்கள். மீன் எப்படித் தண்ணீரில் தெரியும் சந்திர பிம்பத்தை அதுவும் ஒரு நீர்வாழ்த் பிராணிஎன்றும் அழகாய் இருக்கிறது என்றும் நினைக்கிறதோ, அது அமிர்த கலசத்தில் தோன்றியது என்பதை அறியாதோ அதேபோன்று தங்களிடையே பிறந்து வாழ்ந்து வந்த என் ஆண்டவனை அவர்கள் நன்கு அறிந்து கொள்ளவில்லையே. யாதவர்கள் புத்திசாலியான இனத்தவர்கள் தாம். பிறருடைய மனதைக்கூடப் பார்த்த மாத்திரத்தில் தெரிந்து கொள்ள வல்லவர்கள். கூர்மையான அறிவு படைத்தவர்கள். என் ஆண்டவனோடு விளையாடி மகிழ்ந்து கூடி வாழ்ந்தவர்கள். ஆனால் எந்தப் பொருளிடத்து இப்பிரபஞ்சம் நிலைபெற்றிருக்கிறதோ அப்பெரிய பொருளைத் தங்கள் இனத்தவர்களில் ஒருவர், மிக்க சிரேஷ்டமானவர், தலைசிறந்தவர் என்று அறிந்திருந்தார்களே அன்றிக் கடவுள் என்று அறிந்துகொள்ளவில்லை. தன் அந்தராத்மாவான ஆண்டவனிடத்து யார் தன் ஹிருதயம், அன்பு முழுவதையும் ஒப்படைத்திருக்கிறானோ அப்படிப்பட்டவனுடைய அறிவுதான் மாயையில் மயங்காது, கலங்காது, விஷயங்களை உள்ளபடி காணும். என் ஆண்டவ

னின் மாயையால் மதிமயங்கிப் போன சிசுபாலனைப்போன்ற சிலர் சொன்ன அவச் சொற்களால், ஸ்ரீ கிருஷ்ண தூஷணையினால், விரோத பாவனையால் உண்மையான பக்தர்களுக்கு மனம் மாறாது, மதிப்புக் குறையாது, ஆண்டவனின் அருட் சக்தி அதன் மூலம் வெளிப்படுவதை, அவனது பெருங்கருணை அதில் பொலிவதைக் காண்பார்கள். பெரிய தபஸ் ஏதும் செய்யாத, ஆத்ம சாதனம் ஏதும் செய்யாத, பக்தியில் சிறந்து விளங்காத பல படி கீழ்த் தரங்களில் உள்ள சாதாரண மக்களுக்கும் என் ஆண்டவன் தன் புனிதமான தெய்வீகத் திருக்கோலத்தை, விசுவரூபத்தைக் காண்பித்தான். அந்த மந்த ஆத்மாக்களும் அத்தெய்வக் காட்சியைப் பார்த்து அதிசயித்தார்கள், ஆனந்தித்தார்கள். ஆயினும் அவர்களிடம் அருள்நாட்டம் இல்லை, மனத்தூய்மை இல்லை; பக்தி உணர்வு இல்லை. அதனால் அவர்கள் மனதிலிருந்து, அவர்களது கண் பார்வையினின்று ஆண்டவன் மறைந்து விட்டான், மறைத்துவிட்டான். அந்தோ, அவர்களுக்குக் கண் இருந்து என்ன பயன்? மானுடப் பிறப்பு வந்து என்ன பயன்? சில வீணை மானுடருக்குத் தெய்வீக தர்சனத்தினால் கூட ஒரு நன்மையும் உண்டாவதில்லை. தன்னுடைய அமானுஷ்யமான, தெய்வீக சக்தியைக் காட்டுவதற்கு அத்திருக்கோலம் கொண்டான். அவனது அலகிலா விளையாட்டில் இதுவும் ஒன்று. அவனது திருவிளையாடல்கள் உலகுக்கு மட்டுமன்று, என் ஆண்டவனுக்கும் ஆச்சரியத்தையும், ஆனந்தத்தையும் தருகின்றன. என் ஆண்டவன் ஆனந்த பூர்த்தி, ஆனந்த மூர்த்தி, ஆனந்தன், பரமானந்தன், கருணைக் கடல், நிறைபொருள், பூரணன், சுந்தரன், சாந்தன், சாஸ்வதன், சர்வக்ஞன், ஜகன் மோஹனன், மனமோஹனன். என் ஆண்டவனின் வடிவு அழகு சொல்லில் அடங்காதது. அவனுக்குச் சாத்திய ஆபரணங்களுக்கு அவனால் அழகு உண்டாகிறது. அவனை வர்ணிக்க வார்த்தைகளே இல்லை.

யுதிஷ்டிரனின் ராஜசூய யாகத்தின் முடிவில் என் ஆண்டவன் சிசுபாலவதத்தின் பொருட்டு எடுத்தருளிய திருக்கோலத்தை, கண்கொள்ளாக் காட்சியைப் பார்த்த மூவுலக வாசிகளும் பேர் ஆச்சரியம், ஆனந்தம் அடைந்தார்கள். பிரம்மாவின் சிருஷ்டி, கைத்திறன் அக்கோலத்தை உருவாக்கியதில் பூரணம் அடைந்துவிட்டது, உயர்வானது ஆகிவிட்டது என எண்ணினார்கள். கண்களுக்கு அதை விட மங்களமான, தெய்வீகமான, ஆனந்தமான காட்சி வேறு என்ன கிட்டப்போகிறது. ஸ்ரீ கிருஷ்ணனின் திவ்விய மங்கள, மனமோஹன வடிவம் என்றுமே யார் மனதையும் விட்டு அகலாது. என் ஆண்டவனிடம் கோபிகாஸ்திரீகள் வைத்திருந்த அன்புக்கு அளவே இல்லை. அந்த அன்பை என் ஆண்டவன் எப்படி எல்லாம் திருப்பிச் செலுத்தினான்! அவனது அளவில்லாத குறும்பு, சேஷ்டை, புன்னகை, அன்பான பார்வை இவைகளில் ஏதாவது ஒன்றே இந்த ஜன்மத்திற்குப் போதும், அது எடுத்த பயன் கைகூடி விட்டது. அவனை விட்டுப் பிரிந்திருக்க யாராலும் எப்போதும் முடியாது. அந்தக் கோபிகள் தாங்கள் மனதையும் பார்வையையும் என் ஆண்டவனிடம் வைத்துச் சிலை போன்று நின்றார்கள். அவன் வனத்துக்குப் போனான். தாங்கள் வீட்டுக் காரியங்களை அரைகுறையாக அப்படி அப்படியே போட்டுவிட்டு அவனைப் பின்பற்றி வனத்துக்குப்போய்விட்டார்கள். இவ்வுலகில் உள்ள எல்லா வடிவங்களும், உயிர்களும் சர அசரப் பொருள்களும் என் ஆண்டவனே. அவனே அப்படி வடிவெடுத்திருக்கிறான். ஆயினும் அவனது ஸ்ரீகிருஷ்ணகோலம் அலாதியான உத்தமமான அழகும், இனிமையும், புனிதமும் மங்களமும் பொருந்தியதாக இருப்பதற்கு ஒரு காரணம் இருக்கிறது. அவனுடைய வடிவங்களில் நன்மை, சாந்தம், தர்மம், நேர்மை, சீலம் மிகுந்த உத்தமமான உயிர்கள் இருக்கின்றன. உக்கிரமான, தீமை நிறைந்த, கொடுமையான வடிவங்களும் இருக்கின்றன. தீயவர்கள் நல்லவர்களை இம்சிப்பதும், அவர்களை அடக்குவதும் என் ஆண்டவனுக்குப் பொறுப்பதில்லை. அதை அவன் சகித்துக்கொள்ள மாட்டான். இந்த ஜகத்துக்கு நாதனாகிய என் ஆண்டவன் தன் பிரதான பாகமாகிய பலராமனோடு இவ்வுலகில் மிக்க அன்பும் அதன் விளைவான பேர் அழகும்கொண்டு யது குலத்தில் மானுட ரூபத்தில் தோன்றினான். தன் அன்பு,

கருணையினாலும், அழகாலும் நல்லவர்களை எல்லாம் இன்னும் நெருக்கமாகத் தன்பால் இழுத்துக் கொண்டான். தன் தெய்வீக சக்தியால் தீயவர்களை ஒடுக்கினன். என் ஆண்டவன் பிறப்பற்றவன். நெருப்பு எங்கும் மறைமுகமாக நிறைந்துள்ளது. ஆனால் எரியும் விறகில் அதன் தோற்றம் ஸ்பஷ்டமாக வெளிப்படுகிறது. அதே போன்று என் ஆண்டவனே இப்பிரபஞ்சம் அனைத்தும் ஆகியிருக்கிறான். அதில் அவன் மறைந்துள்ளான். ஆனால் அவனது அன்பினால் எடுத்த அவதாரத்தில் அவனது தெய்விகம் மறைக்க முடியாதது ஆகிறது. தெய்விகம் விசேஷமாக விளங்குகிறது. இங்ஙனம் என் ஆண்டவன் வசுதேவருக்கு மகனாகப் பிறந்தார். ஆனால் அந்தச் சர்வசக்திமான் கம்சனுக்குப் பயந்தவன்போன்று அவனால் அறியப்படாமல் பிருந்தாவனத்தில் மறைந்து வாழ்ந்தான். காலயௌவனன் முதலிய அவனது விரோதிகளுக்குப் பயந்தவன்போன்று அவன் மதுராநகரத்தைவிட்டு ஓடிவிட்டான். இவைகளை நினைக்கும்போது எனக்குக் குழப்பம் உண்டாகிறது. இந்த சம்பவங்களை எல்லாம் நினைக்கும் போது எனக்கு மிகவும் வருத்தம் உண்டாகிறது. சிறையில் வாடிக் கிடந்த தன் தாயையும் தகப்பனாரையும் விடுவித்து அவர்களுக்கு வீழ்ந்து வணங்கிப் பாதபூஜை செய்து "என் அன்புள்ள அம்மா, அப்பா! கம்சனுக்குப் பயந்து நாங்கள் உங்களுக்குப் பணிவிடை பண்ணமுடியவில்லை. எங்கள் புத்திரக் கடமையை நிறைவேற்றமுடியவில்லை. நீங்கள் அருள்கூர்ந்து எங்களை மன்னித்தருள்வீர்களாக" என்று என் ஆண்டவன் பிரார்த்தித்தான். என் அன்புள்ள விதுரா, என் ஆண்டவனின் திருவிளையாடல்களை என்னென்பேன். அவன் பிறப்பற்றவன், மானுட உலகில் தோன்றுகிறான். அவன் எந்தப் பயமும் அற்றவன்; பயந்தது போல் காட்டிக்கொள்கிறான். அவனுக்கு எந்தக் கடமையும் பந்தமும் கிடையாது. அவன் மாத்ரு பித்ரு பக்தி செய்கிறான். என் ஆண்டவனே, நீ லீலாவினோதன். என் ஆண்டவன் கோபித்துத் தன் புருவத்தை நெளித்துப் பார்த்தான், பூமாதேவியை வருத்திக்கொண்டிருந்த பூபாரம், தீயோர் கூட்டம் துடைக்கப்பட்டுவிட்டார்கள். அவனது பாதஸ்பர்ஸத்தை, அவனது பாததூளியைத் தலையில் வகித்த யாராவது அவனை மறக்க இயலுமா; அவனது தாமரைத் திருவடிகளின் மணமே தெய்வீகமானது, மனோஹரமானது.

என் அன்பான விதுரா! ஸ்ரீகிருஷ்ணன் ஆண்டவன் என்பதை நான் உனக்கு விளக்கவா வேண்டும்? நீயே பிரத்யக்ஷமாகப் பார்த்து உணர்ந்து பக்திபண்ணுபவன் அல்லவா? யுதிஷ்டிரரின் ராஜசூய யாகத்தில் சிசுபாலன் என் ஆண்டவனை மிகவும் இழித்துப் பேசினான், தூஷணை பண்ணினான். என் ஆண்டவன் அவனை வெளிப்பார்வைக்கு வதம் பண்ணினான். ஆனால் சிசுபாலனே மிக உயர்ந்த யோகியர்கள் அடைகிற பெருநிலை அடைந்தான் அன்றோ. ஆகையால் விதுரா, என் ஆண்டவனின் பிரிவை நான் எங்ஙனம் சகிப்பேன். சிசுபாலன் ஒருவன் மட்டும் இப்பெருநிலை அடையவில்லை. மஹாபாரதப்போரில் அர்ஜுனனால் கொல்லப்பட்ட எல்லா வீரர்களும் அப்பெருநிலை அடைந்தார்கள். ஏனென்றால் அவர்களின் மரணத்தறுவாயில் ஸ்ரீ கிருஷ்ணனின் மந்தஹாச சுந்தரவதனத்தைப் பார்த்தவண்ணம் மாண்டனர் அன்றோ! அவர்கள் எல்லாம் ஸ்ரீகிருஷ்ண லோகத்தை அடைந்தனர். என் பிரபு மூன்று உலகங்களுக்கும் நாதன். அவனுக்குச் சமமானவரோ மிக்காரோ இல்லை. அவன் என்றும் நிறைநிலையில் இருக்கிறான். அவனுக்கு நிறைவேறாத ஆசை இல்லை. அவன் பரமதிருப்தன். தன் நிலை மாறாதவன். அவன் ஆசைப்படுவதற்கு ஒன்றுமில்லை. திக்பாலர்களும், தேவர்களும் கூட என் ஆண்டவனின் திருப்பாதங்களில் தங்கள் முடிபடும்படி வணங்கி வழிபட்டுத் தங்களின் அன்புக் காணிக்கையாக மிக உயர்ந்த பொருள்களைப் படைக்கிறார்கள். ஓ விதுரா, இப்படிப்பட்ட என் பிரபு உக்ரசேனருக்குச் சேவகனைப் போன்று பணிவிடை பண்ணுவார். அப்பரம பிரபுவின் அடிமையாகிய நம் போன்றவர்களுக்கு இக்காட்சியைக் காணும்போதும் கேட்கும்போதும் மனது உருகுகிறது. என் ஆண்டவன் எவ்வளவு எளியவன். உக்கிரசேனர் சிமமாசனத்தில் வீற்றிருப்பார். என் ஆண்டவன் அவர் முன் நின்று 'மஹாராஜா என் பிரார்த்தனைக்குத் தயவு செய்து செவிகொடுங்கள்' என்று வேண்டுவார்.

என் யாத்திரை அனுபவங்கள்

(சுவாமி துருவானந்தர்)

ஓங்காரேசுவரர் கோயில் மிகப் பழையது. அக்கோயிலை ஆதிசங்கரர் பிரதிஷ்டைசெய்தது என்கின்றனர். ஆனல் அது ஜைனக்கோயில். மூலஸ்தானத்தில் லிங்கம் தவிர மற்ற அனைத்திலும் ஜைனத்துறவிகள் தவக்கோலத்தில் இருப்பதைஏராளமாகச் செதுக்கியுள்ளார்கள். ஜபம், தியானம் செய்துவிட்டுக் கோயிலைவிட்டு வெளியேறிக் கொண்டிருந்தபொழுது சில காட்சிகள் மனதிற்கு வேதனையைத் தந்தன. யாத்திரிகர்கள் நீராடி விட்டுத் தாங்கள் கொண்டு வந்த சில்லரைக் காசுகளை ஆற்றில் எறிகிறார்கள். ஏன் பணத்தை எறிகிறீர்கள் என்று கேட்டேன். எல்லாரும் செய்கிறார்கள். அதனல் தான் நானும் செய்கிறேன் என்றான் ஒரு பட்டதாரி இளைஞன். அவனருகே சில ஏழைக் குழந்தைகள், கெஞ்சி வேண்டியும் தராத இந்தக் கல் மனம் படைத்த கூட்டம் கோதாவரி நதியில் காசுகளை எறிந்து என்ன இறையனுபவம் பெற்றார்களோ? பக்தி என்ற பெயரிலே பல மூடநம்பிக்கை எங்கும் மக்கள் உள்ளத்திலே உலவி வருகிறது. அவற்றில் இதுவும் ஒன்று. இதைத் தான் விவேகானந்தர் கண்டிக்கிறார். கண் முன்னல் பசி, பட்டினியினல் அவதியுறும் ஏழைகளிடம் தெய்வத்தைக் காணுதவன் வேறு எங்கே கடவுளைக் கண்டு விடப் போகிறான் எனக் கேட்கிறார். எப்படியோ கோயில் தரிசனம் முடிந்து, இறையுணர்வுடன் இருந்த போது கண்ட்வா என்ற ஊருக்குப் பஸ் போகிறது என்று சொன்னார்கள். அருகில் உள்ள அவ்வூரிலிருந்து புகைவண்டியில் பிரயாணம் செய்யலாம் என்று சில விஷயம் தெரிந்தவர்கள் யோசனை கூறினர்கள். அவர்கள் கூற்றுப்படி செய்யலாம் என எண்ணிப் புகைவண்டி நிலையத்தில் விடிய விடிய காத்திருந்தபொழுது "இனி புகைவண்டி ஓடாது, ஆந்திர அரசு கவிழ்க்கப்பட்டதால் நாடு தழுவிய போராட்டம் நடைபெற உள்ளது" என்றார்கள். பத்திரிகைகள் இவைகளை மிகவும் பெரிதுபடுத்திப் பயமுறுத்தின. இயற்கையில் ஏற்படுகின்ற இன்னல்கள் போதாதென்று செயற்கையாக ஏற்படுகின்ற தொந்தரவும் தனிமையில் பயணம் போகிறபோது உலுக்கி விடுகிறது. எப்படியோ இனி தென் இந்தியா திரும்பி விடுவதே உசிதம் என்று எண்ணியிருந்தபோது ஹைதராபாத் செல்லும் வண்டி வந்தது. எங்கும் ஒரே கூட்டம். ஒரு கம்பார்ட்மண்டில் ஒரு இஸ்லாமிய அன்பர் சைகைகாட்டி கூப்பிட்டார். அருகில் சென்றேன். தன் அருகே ஓர் இடம் இருப்பதாகக் கூறி இன்முகத்துடன் அமரச் சொன்னர். அவர் ஹைதராபாத் போய்க்கொண்டிருந்தார். நாற்பது வயது மதிக்கத்தக்கவர். என் அருகே இருந்ததினல் பேசிப்பார்த்தேன். பரந்த மனப்பான்மை படைத்தவர். அவர் பெயர் நசிருதீன். ஐந்து தடவை நமாஸ் (தொழுகை) பண்ணுகிறார். அது மட்டுமன்று; மத வெறியில்லாது தூய வாழ்க்கையின் மூலமே இறையுணர்வு பெற முடியும் என்று கூறினர். ராமகிருஷ்ணர், விவேகானந்தரின் சிறப்பையும் இந்த மூர்த்திகளின் மூலம் நாடு அடைந்த பெருமையையும் கூறினர். நம் நாட்டிலே முஸ்லீமாக இருந்து இந்து சமயத் தலைவர்களைப் போற்றிய, மத வெறியில்லாத அந்த முஸ்லீம் அன்பர் கூறிய சில விஷயங்கள் என்னைச் சிந்திக்க வைத்தன. "படித்த முஸ்லீம்களிடம் மதவெறியில்லை. சீர்திருத்தத்தை, சுதந்திரமாகப் பெண்கள் வாழ விரும்புவதை அவர்கள் பெரிதும் விரும்புகின்றனர். ஆனல் முஸ்லீம் மதகுருமார்களான முல்லா மௌல்வி கையில் அகப்பட்டுக் கொண்டுதான் தத்தளிக்கின்றார்கள்" என்றார். அதோடு நம் நாட்டில் எல்லாச் சமயத்தாரும் சமத்துவமாக வாழவேண்டுமானல் R. S. S. இயக்கம் மக்களிடையே அதிகம் பரவ வேண்டும். அப்போது தான் ஹிந்து, முஸ்லீம், கிறிஸ்தவர்கள் ஒற்றுமையாக நம் தாய் நாட்டில் சகோதரர்கள் போன்று வாழமுடியும்" என்றார். இவ்வாருக என்னேடு பேசிக் கொண்டு எனக்கு அவ்வப்போது பலவகையிலும் உதவியதுடன் ஹைதராபாத் வந்து சேர்ந்தோம். நான் போகவேண்டிய இடத்திற்கு ஆட்டோ ரிக்ஷா பிடித்து உடன் வந்து

விட்டுச் சென்றார்.

ஹைதராபாத் வந்து சேருவதற்கு முன்னமே ரயில் பாதைகளில் சரக்கு ரயில்கள் கவிழ்க்கப் பட்டு, தந்திக் கம்பங்கள் முறிக்கப்பட்டு, ஏராளமான பொதுச் சொத்துக்கள் நாசமாக்கப்பட்டுக் கிடந்தன. புயல்அடித்தால்எவ்வாறு ஒரே அமளியாக இருக்குமோ அதேபோன்று மனிதன் மனதிலே வன்முறை உணர்வு தலையெடுத்தால் எவ்வளவு நாசவேலைகள் நிகழும் என்பதை அன்றுதான் கண்ணாரக் கண்டேன். ஆந்திர மாநில மக்கள் எப்போதும் காரத்தை விரும்பிச் சாப்பிடக்கூடியவர்கள். அதனால் எளிதில் சினம் கொள்வதும் அவர்கள்தாம். அதனால் செய்கின்ற செயல்களும் பின்விளைவை எதிர்பாராது காரசாரமாகச் செய்து விடுகின்றனர் போலும். ஆந்திர அரசு அடிக்கடி மாறிய தன் விளைவாக மக்களும் அமைதியிழந்து இருந்தபோது நானும் அம்மாநிலத்தில் சிக்கினேன். இருந்தாலும் நிதானப் போக்குடைய சிலர் சட்ட ஒழுங்கை நிலைநாட்ட அமைதியை உண்டு பண்ணினர்.

23—8—84 அன்று தேசப்பணிக்கெனவே தன் வாழ்வை அர்ப்பணித்த R. S. S. முழு நேர ஊழியர் ஒருவர் என் உடன் வர ஆந்திர மாநிலத்தின் தலைநகராம் ஹைதராபாத்தைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டோம். தொழிலதிபர் பிர்லா கட்டிய பாலாஜி மந்திர், அதாவது மஹாவிஷ்ணுவுக்கு அமைக்கப்பட்ட அழகான ஆலயம். கோயிலைப் பராமரிக்கின்ற விதம் அற்புதமானது. எங்கும் சுத்தமாக இருக்கிறது. ஆங்குள்ள மூர்த்தி சுந்தரராஜன்; அவன் குடியிருக்கும் கோயில் சுந்தர லோகமாகத் திகழுகிறது. ஆங்காங்கு அமைக்கப்பட்ட சிற்ப வேலைப்பாடுகள் உள்ள விக்ரஹங்களைப் பார்த்துக்கொண்டே மெய்மறந்து போய்கொண்டிருந்த பொழுது குரல் கேட்டுத் திரும்பினேன். "ஏமண்டி, இக்கட ரண்டி; தீசுகண்டி" என்ற சுந்தரத் தெலுங்கினில் பேசிஅன்பொழுக இறைவன் பிரசாதத்தைக் கொடுத்தனுப்பினர் நடு வயது உள்ள கோயில் பணியாளர். மாதா அன்னபூரணி கோயிலுக்குப் போகிறவர்கள் யாரும் பிரசாதம் பெறாது திரும்ப முடியாது என்பது போல் இக்கோயிலிலும் அம்முறையை வைத்துள்ளனர். பார்த்தனுக்குச் சாரதியாக இருந்த கண்ணன் அமர்ந்த இடத்தில் தியானம் செய்தோம். கொந்தளிப்பான போர்க்களத்தில் குழப்பமான அர்ஜுனன் மனக்கலக்கம் நீங்கி கண்ணன் கீதையால் மனவமைதி பெற்றான். நாள் தோறும் வாழ்க்கை என்ற சுழலுக்குள் சிக்கி, தத்தளித்துத் தடுமாறும் மனிதனுக்குப் படகு போன்று உதவி அவனுக்கு நிரந்தர நிம்மதியைத் தரவல்லது ஆண்டவன் சந்நிதானம், ஆக நாள்தோறும் கண்மூடி கவலையை மறந்து கண்கண்ட தெய்வத்தை நினைப்பவன் கரைகாணு அமைதியுறுகிறான்.

மறு நாள் மாலை ஹைதராபாத்தில் உள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்திற்குப் போனோம். நுழை வாயிலில் நின்று கொண்டே குருதேவரைத் தரிசிக்கலாம். அத்தகைய ஒளிப்பிழம்பான பின்னணியோடு கூடிய குருதேவர் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் விக்ரஹம் நம்மோடு பேசுவது போன்று இருக்கிறது. உள்ளே போகப் போக மதுரமான கீதம். பக்தி பூர்வமான பஜனை நடந்து கொண்டிருந்தது. அன்று ஏகாதசி தினம். அந்தப் பிரார்த்தனை மண்டபம் நிறைய அன்பர்கள் தாய்மார்கள். துளசிதாசர் இயற்றிய இராமாயணப் பாடலில் சில பகுதிகளை இசையுடன் வாத்தியக் கருவிகள் முழங்கப் பாடிக் கொண்டிருந்தனர். கணீரென்ற குரலில் துறவி ஒருவர் பாடத்தொடர்ந்து மற்ற பக்தர்கள் அனைவரும் தங்களை மறந்து மனம் உருகிப் பாடியது நம்மை அதீதநிலைக்கு எடுத்துச் செல்வது போன்று இருந்தது. வழிபாடு முடிந்து தீர்த்தப் பிரசாதம் பெற்று அருளே வடிவான ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகள் கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்து விட்டு ஸ்ரீ சைலம் புறப்பட்டோம்.

ஸ்ரீ சைலம் மிகப் பெரிய கோயில். ஆனால் கோயிலைக் கெடுப்பதற்கென்றே சில குறுகிய மனப்பான்மை படைத்தவர்கள் எங்கும் உள்ளனர். கோயிலில் பணியாற்றினாலும் பக்தியோ, பண்பாடோ இல்லாத கூட்டங்களைப் பொதுவாகக் காணலாம். அருளுக்காக வாழாது வெறும் பொருளுக்காக வாழும் இலௌகிக மனப்பான்மை உள்ளவர்களைக் கோயிலுக்குள் நுழைய விட்டிருக்கக் கூடாது. பணம் ஏராளமாகப் புரளும் பெரிய கோயில்களில்தாம்

இத்தகைய பிழைப்பை நம்பி வாழும் மோசடிக் கும்பல்கள் அதிகம். மாலை ஐந்துமணி ஆகியும் இன்னும் கோயில் திறக்கவில்லையே என்று நினைத்துக்கொண்டிருந்த பொழுது கோயிலுக்குள் வேறு வழியில் சிலரைவிட்டுப் பணம்வாங்கிவியாபாரம் செய்யும் பேர்வழிகள் சிலர் இக் கைங்கர்யங்களைச் செய்து வந்தனர். எப்படியாவது கோயில் தரிசனம் பெறவேண்டும் எனத் துடித்தவர்கள், பணம் கொடுத்துக் குறுக்கு வழியாகச் சென்று சுவாமி தரிசனம் செய்தனர். பணம் கொடுத்துக் கோயிலினுள் சென்றாலும் அவன் நிச்சயம் கடவுளைக் காண முடியாது. பிறகு ஒரு வழியாகத் தரிசனத்தை முடித்துக்கொண்டு கோயிலைவிட்டுக் கிளம்பினேன். ஸ்ரீசைலத்தில் விக்ரகங்களின் சிற்பத் திறன், சுதைவேலை முதலியன தமிழ் நாட்டிலிருந்துபோன சிலருடைய கைவண்ணம் என்று கேட்டபொழுது மெய் சிலிர்க்கிறது. தரிசனம் முடிந்து காளஹஸ்தி காணப் புறப்பட்டேன். பக்தராஜன் கண்ணப்பன் தன் உண்மையான பக்தியைக் காட்டிய இடம் காளஹஸ்தி. அருள் சாந்நித்தியம் ஏராளமாக உள்ள கோயில். ஒரு காலத்தில் காடு போன்று மண்டிக்கிடந்த இடத்தில் இன்று பிரம்மாண்டமான கோயில் திகழுகிறது. காளஹஸ்தி நமக்குப் பல வகையிலும் வழிகாட்டுகிறது. கொள்ளையடிக்கைவிருந்த ரத்னாகரன் ராம நாமத்தின் மகிமையால் வால்மீகி மகரிஷியாக மாறி அற்புத காவியமான இராமாயணத்தைச் சமஸ்கிருதத்தில் எழுதினார். காட்டில் வேட்டையாடி வாழ்ந்து வந்த ஒரு பாமர இளைஞன் தீவிரமான சிவ பக்தியினால் சிவனருள் பெற்றான். தன் ஊனக் கண்ணைத் தோண்டி எடுத்துப் பின் ஞானக்கண்ணைப் பெற்றான். அவன் நடமாடிய இடம் இன்று கோயிலாகத் திகழ்கிறது. ஒருவன் எங்கு எந்தக் குலத்தில், எந்தச் சூழ்நிலையில் பிறக்கிறான் என்பது முக்கியமானதன்று. அவன் பக்தியைப் பெற்றுள்ளானா என்பதுவே முக்கியம். எது இருந்தாலும் இல்லாவிட்டாலும் பக்தி ஒருவனுக்கு வாய்த்துவிட்டால் அவன் அனைத்தையும் பெற்றுவிடுகிறான். ஆனால் உலக சுகபோகங்கள், வசதி வாய்ப்புகள் அனைத்தும் இருந்தும் இறைவனைப்பற்றி அருள்தாகமோ, அவனை அடைய வேண்டும் என்ற பேராவலோ, துடிப்போ இல்லையென்றால் மற்றவையனைத்தும் இருந்தும் வீண். இந்தச் சிந்தனைகளை உள்ளத்தில் சுமந்துகொண்டு வட இந்திய யாத்திரையை இனிது முடித்துத் தபோவனம் வந்து சேர்ந்தேன். (முற்றும்.)

ஈசுவர பக்தியில்லாது செய்கின்ற தீர்த்த யாத்திரைகளெல்லாம் அனர்த்தமாய்ப்போய் விடுகின்றன.

உண்மையான ஈசுவர விசுவாசம் உடையவன் ஸ்தல யாத்திரை செல்லுதல், தீர்த்தங்கள் ஆடுதல் ஆகியவைகளில் வருகிற நலன்களையும், அவைகளுக்கெல்லாம் மேலானதையும் அடையப்பெற்றவனாகிறான்.

தேனை அருந்துதல் பொருட்டு மலரின் மீது அமர்தற்கு முன்பு தேனீ ரீங்காரமிட்டுக் கொண்டிருக்கிறது. அதே விதத்தில் சுவானுபூதி வருவதற்கு முன்பு சாதகன் ஒருவன் வந்தனை வழிபாடு, தீர்த்த யாத்திரை முதலியவைகளை நிறுத்தி விடலாகாது.

புண்ணிய ஸ்தலங்களில் நான் ஆனந்த பரவசமடைவது மிக எளிது. பிருந்தாவனத்தில் காளிங்க மர்த்தனம் நிகழ்ந்த இடத்துக்குப் போனபொழுது என்னையறியாது என் உள்ளத்தில் பேரானந்தப் பரவசநிலை உண்டாய்விட்டது.

நான் பிருந்தாவனத்துக்குச் சென்றிருந்த பொழுது ஒரு நாள் மாலையில் பசுக்களை ஓட்டிக்கொண்டு சிறுவர்கள் யமுனை நதியைக் கடந்து வருவதைப் பார்த்தேன். 'ஓ கிருஷ்ணா, நீ எங்கே இருக்கிறாய்?' என்று கேட்டுக்கொண்டு நான் பரவசமடைந்துவிட்டேன்.

— ஸ்ரீ ராமகிருஷ்ணர்

அறவாழ்வும் ஆன்மீகச் சிந்தனையும்

(ஸ்ரீமத் சுவாமி சித்தியானந்தர் 12—4—85 அன்று குன்னூர் அந்தர்யோகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு)

[238 ஆம் பக்கத் தொடர்ச்சி]

உடலில் பிராணன் நிலைப்பதற்காகத் தேகத்தின் அங்கங்கள் யாவும் இயங்குகின்றன. அதுபோன்று தேசம் பொலிவு பெறுவதற்குத் தேசத்தின் மக்கள் யாவரும் ஒத்துழைக்க வேண்டும். பிராணவாயுவைக் கணந்தோறும் நமது உடலின் உயிரணுக்கள் உட்கொண்டு உடலை உறுதிப்படுத்துதல் போன்று, தேசிய மந்திரத்தை நம் நாட்டு மக்கள் யாவரும் ஜபித்து நாட்டுக்கு நலன் செய்யவேண்டும். மனம் உருகிக் காயத்ரி ஜபம் பண்ணுபவர்கள் பிறப்பால் தாழ்ந்தவர்களாயினும் தங்கள் தர்மத்தால் உயர்நிலையை அடைந்து உய்வுபெறுவார்கள். இதற்கு எல்லார்க்கும் உரிமை உண்டு. இதனால் மனித வாழ்க்கையைப் பாழ்படுத்துகின்ற கீழான எண்ணங்களும் செயல்களும் ஒழிந்து, நல்ல செயல்களுக்கும், உயர்ந்த நோக்கங்களுக்கும் ஆதரவு பெருகும். மனிதர்களில் பெரும்பாலோர் அந்தரங்க சுத்தியும், ஆன்மீக பலமும் பெற்றுத் திகழுவார்கள்.

வீரியம் என்பது உடலளவில் மட்டுமின்றி உள்ளத்திலும் நிறைந்திருக்க வேண்டும். அதன் பொருட்டு நாள் தோறும் பொழுது புலருமுன் சூரிய நமஸ்காரம் என்னும் யோகப் பயிற்சியை விடாது செய்ய வேண்டும். பின்னர் ஸ்நானம் செய்து நெற்றிக்குத் திருநீறு, திருமண் ஏதேனும் அணிந்து காயத்ரீ மந்த்ரம் ஜபிக்க வேண்டும். இதனை ஆண்கள், பெண்கள், இளைஞர்கள், யுவதிகள், சிறுவர், சிறுமியர் யாவரும் செய்யலாம். ஒரு நாளில் எத்தனைமுறை வேண்டுமாயினும் காயத்ரீ ஜபிக்கலாம். குறிப்பாகச் சந்தியா காலங்களில் ஜபித்தல் மிகவும் சிறப்பு. அதிகாலை, நண்பகல்,அந்திவேளை ஆகிய மூன்று காலங்களிலும் சொல்லுதல்வேண்டும். காயத்ரியை மனத்தினுல் ஓத வேண்டும். இதை இயந்திரம் போன்று ஒரு கணக்குக்காக ஒரு நித்திய சடங்காக எண்ணிச் செய்வதாலும், வாயால் திருப்பித் திருப்பிச் சொல்லுவதாலும் ஒரு நன்மையும் ஏற்படாது. மாருக உள்ளம் ஒன்றித்து ஆழ்ந்த பக்தியுடன் இதனை ஜபித்தால் உள்ளத்தில் குழப்பங்கள் தீர்ந்து தெளிவு ஏற்படும். உடலிலும் புதிய பலம் பெருகும். நாளடைவில் பிரம்ம தேஜஸ் உண்டாகும். பிரம்மதேஜஸ் பெற்றவர்கள் அதிகரிக்குமளவு நாட்டின் பெருமையும், புகழும் அதிகரிக்கும்.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் தமது வாழ்க்கையில் இதனை நிரூபித்துக் காட்டினுர். தமக்குப் பணிவிடைகள் செய்து வந்த லாட்டு என்ற பாமரருக்குச் சிறிதளவாவது வங்காளம் கற்பிக்கவேண்டும் என்று அவர் முயன்ருர். லாட்டுவுக்குப் படிப்பு ஏற வில்லை. அவர் ஆழ்ந்த ஈடுபாட்டுடன் தமது குருநாதருக்குத் தொண்டுகள் செய்து வந்தார். உள்ளத்தால் உயர்ந்து நின்ற சான்ருேர்களிடம் அவர் காட்டிய அத்தகைய பணிவும், பரிவுமே அவருடைய ஞானத்துக்கு அடிப்படையாய் அமைந்தன. பிற்காலத்தில் அவர் தத்துவங்களில் நிறை ஞானம் பெற்றவராய் அற்புதானந்தர் என்ற திருநாமத்தோடு விளங்கினுர். வேதாந்த உபநிடதங்களில் தெளிவை நாடித் தம்மிடம் வருவோரை ஸ்ரீ விவேகானந்தர் அவரிடமும் அனுப்பி வைப்பார். அத்தகைய நிறைஞானம் பெற்றிருந்த அவர் என்றும் அடக்கமும், அன்புமாகவே காட்சி தந்தார். பக்தியினுல் அவர் பெற்ற பெரும் செல்வம் இதுவாகும்.

ஞானம் என்பது பிறப்பினுல் வருவது அன்று. அது ஒரு குறிப்பிட்ட இனத்தார்க்கு மட்டும் உரியதும் அன்று. அருள் நாட்டம் உடைய எவரும் ஞானம் பெறத் தகுதி வாய்ந்தவராவர். எனவே காயத்ரீயைப் பொதுவுடைமை ஆக்கவேண்டும். அதனை ஓதியவர் யாவரும் உய்வு பெறுதல் திண்ணம். உடல் நோய்க்கு வைத்தியர் மருந்து தருகின்ருர். உள்ளத்தின் நோய்க்கு இதமான மருந்து காயத்ரீ. இந்த மருந்தை ஞானசிரியன் தருகின்ருர். மருந்தை வைத்தியர் கண்டு பிடிக்கவில்லை. நோயையும் அவரேஅனுபவித்து அதன் தன்மையைத் தெரிந்துகொள்ள வேண்டு மென்பதில்லை. நோயாளியைத் தாக்கியுள்ள நோயின் மூலகாரணம் இன்னது

என்றும், அதனைக் கண்டிக்கும் ஔடதம் இன்னது என்றும் அவர் சரிவரக் கணித்தாலே போதுமானது. மருந்தை எழுதித் தருவதோடு வைத்தியர் கடமை முடிந்தது. அதனை உட்கொண்டு அது ரத்தத்தில் கலக்குமாறு செய்ய வேண்டுவது நோயாளியின் கடமையாகும். மருந்து நோயைக் குணப்படுத்துவது போன்று காயத்ரீ மனதிலுள்ள கசடுகளை நீக்கும்.

நமது உள்ளம் பண்படுவதற்காக நம் முன்னோர் வகுத்துக் கொடுத்துள்ள இந்த மருந்தை நமது மனமானது முறையாக உன்னுதல் வேண்டும். அதன் சாரத்தை அது கிரகிக்கவேண்டும். மனது அதனைச் சிந்தனை பண்ணப் பண்ண மனதிலுள்ள கேடு நீங்குகிறது. மாசற்ற மனது நமக்கு வந்து அமைகிறது. அதன் மூலம் துன்பத்தைத் துடைப்பது சாத்தியமாகிறது. இவ்விதம் ஆத்மஞானத்தை நாடுகின்ற ஒருவன் இன்ன குலத்தில் அல்லது இன்ன குடியில் தான் பிறந்திருக்கவேண்டும் என்று வரையறுக்கலாகாது. ஆத்ம ஞானத்தை நாடுதல் என்ற முயற்சியில் உணர்ச்சி பூர்வமாக ஈடுபடாதவன் உயர்குலத்தவனே ஆனாலும் அவன் தாழ்ந்தவனே ஆவான். கடமையிலும் தர்மத்திலும் தவறியவன் குலதர்மத்திலும் வழுவியவனே ஆவான். சுக்ரீவன் மனைவியை அபகரித்த வாலியை ரகுகுலத்தில் பிறந்த ஸ்ரீ ராமன் சிட்சித்ததன் மூலம் உலகுக்கு இவ்வுண்மையை உணர்த்துகின்றான்.

இராமாயணத்தில் வாலி வதைப் படலத்தில் "உயர்குடியில் பிறந்த நீ இத்தகைய இழிசெயலைச் செய்வது எங்ஙனம் பொருந்தும்?" என்று ஸ்ரீ ராமனைப் பார்த்து வினவுகின்றான் வாலி. "இது என்ன தர்மம்? மரவுரி தரித்துத் தவ்வேடம் பூண்டவன் கொலைத் தொழிலைச் செய்யும் வில்லை எவ்வாறு ஏந்தலாம்? என் மீது பகைமை இல்லாத நீ முன் பின் அறிவியாமல் களத்தில் புகுந்து என் மீது அம்பெய்தது என்ன நியாயம்?" என்று சரமாரியாக வாலி தொடுத்த வினாக்களுக்கு புன்முறுவல் பூத்த முகத்தினனாக ஸ்ரீ ராமன் அளிக்கும் உத்தரவாவது: "நாட்டிலும், காட்டிலும் தர்மத்தை நிலை நாட்டுவதே என்னுடைய க்ஷத்திரியக் கடமை. அதுவே எனது தவம். அவ்வாறு நான் கொண்டுள்ள விரதத்தின் சின்னமாகவே மரவுரியைத் தரித்துள்ளேன். துஷ்டர்களை ஒழிப்பதற்காகவே இந்தக் கோதண்டத்தை ஏந்தியுள்ளேன். ஒரு பாவமும் அறியாத உன் தம்பிக்கு நீ இழைத்த கொடுமைகளுக்கு உரிய தண்டனையையே இப்பொழுது அனுபவிக்கின்றாய். எதிரியின் பலத்தில் பாதி உன்னைச் சேரும் என்று நீ பெற்றிருந்த வரத்தை அதர்ம நெறிக்குப் பயன்படுத்தியுள்ளாய். அதன் காரணமாகவே நான் மறைந்திருந்து உன்மீது அம்பு எய்ய நேர்ந்தது. தர்மத்தைப் பகைத்தவர்கள் அனைவரும் எனக்கும் பகைவர்களே.

ஸ்ரீராமன் இவ்வாறு பதிலிறுத்தான். ஒவ்வொரு வருணத்தாரும் தத்தமக்கு விதிக்கப்பட்ட கடமைகளைச்சரிவர நிறைவேற்றவேண்டும் என்பது கோட்பாடு. தனது வர்ண தர்மத்திற்குப் பொருத்தமான பாங்கில் ஸ்ரீ ராமன் விளக்கம் தந்தான். பரிபாகத்தில், மனப்பக்குவத்தில், செய்கின்ற தொழிலில், அறிவின் தரத்தில் மக்களுக்கிடையே தாரதம்மியம் இருக்கலாம். மந்திரங்களை மனனம் செய்து ஜபதபயக்ஞங்களை நியமம் தவறாமல் நிறைவேற்ற இயலாதவர்கள் சூத்திரர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். சொன்னதைச் செய்கின்ற பணியே அவர்களுக்கு ஏற்பட்டது. அத்தகையவர்களுக்கும் சிந்தனை தூயதாக அமைந்து செயலும் திருத்தமாக இருப்பின் நாளடைவில் ஞானம் சித்திக்கும் என்பதை நந்தனர், அற்புதானந்தர் போன்ற சான்றோர்கள் நிரூபித்துக் காட்டியுள்ளார்கள். ஆகவே யாவரையும் மேல்நிலைக்கு உயர்த்தவல்ல காயத்ரீயை நாம் அனைவரும் மனனம் செய்து நாள்தோறும் ஜபித்து உய்வு பெறுவோமாக. காயத்ரீ மந்த்ரத்தை எல்லா வருணத்தாரும் ஜபம் செய்யலாம். இனி காயத்ரீ மந்த்ரம் வருமாறு:

ओं भूर्भुवस्सुवः
ओं तत् सवितुर्वरेण्यं
भर्गो देवस्य धीमहि ।
धियो यो नः प्रचोदयात् ॥

ஓம் பூர்புவ ஸ்ஸுவ:
ஓம் தத் ஸவிதுர்வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோ ந: ப்ரசோதயாத்

यः யः யார் नः நः நம்முடைய धियः தியः அறிவை प्रचोदयात् ப்ரசோதயாத் தூண்டுகிருரோ तत् தத் அந்த देवस्य தேவஸ்ய சுடருடைய सवितु ஸவிது: கடவுளின் वरेण्यं வரேண்யம்-மேலான भर्गः பர்கோ-ஒளியை धीमहि திமஹி: தியானிப்போமாக.

யார் நம் அறிவைத் தூண்டுகிருரோ அந்தச் சுடர்க் கடவுளின் மேலான ஒளியைத் தியானிப்போமாக.

இது பிரம்ம காயத்ரி அல்லது சூரிய காயத்ரி. இதுவே இமயம் முதல் குமரிவரை பல்லாயிரம் ஆண்டுகளாக நியமம் தவருமல் ஓதப்பட்டு வருகின்றது. நாதப் பிரம்மமாகிய ஓங்கார ஓசையுடன் இது துவங்குகிறது. இனி பூர்புவ: ஸுவ: ஆகிய மூன்று சொற்கள் பூலோகம், புவர்லோகம், ஸ்வர்க்கம் எனப் பொருள்படுகின்றன. இந்த மூன்று உலகங்களைப் பண்பாடு அடைந்தவர்கள் தங்கள் உள்ளங்களிலேயே காணலாம்.

திரிலோகசஞ்சாரி என்று அழைக்கப்படுபவர் நாரதர். புவர்லோகம், பூலோகம், சுவர்க்கலோகம் ஆகிய மூன்று உலகங்களிலும் பண்பாட்டின் சிகரமாகிய அவர் வலம்வருவார். மானிடர்களாகிய நாமும் அவரைப் போன்ற திரிலோக சஞ்சாரிகளே. நமக்கு உடல் உலாவுவது பூலோகத்தில்; மனம் உலாவுவது கனவு உலகத்தில்; மனம், உடல் இரண்டும் ஒடுங்கிய உலகமே நமக்குச் சுவர்க்கலோகம். சுஷுப்தி என்ற அந்த ஆழ்ந்த உறக்க நிலையில் நாம் அனுபவிக்கின்ற இன்பத்தின் தன்மையை விழித்தெழுந்த பிறகே நாம் உணர்கின்ரேம். யார், என்ன, எங்கே என்று எந்த ஞானமும் இன்றி, இருப்பது தெரியாமல் அங்கே இருந்து விட்டு வருகிரேம். நாள்தோறும் நாம் அந்த உலகத்துக்குச் சென்று வருகிரேம். ஆயினும் சுவர்க்கம் எங்கே என்று ஆயுள் முழுவதும் தேடிக்கொண்டிருக்கிரேம். இன்பம், துன்பம் இரண்டும் விரவியது இந்த உலகம். கனவிலும் இவ்வாறே இன்பமும், துன்பமும் மாறி மாறி வரும். ஒருவன் சுகமான நித்திரையில் உடல் அலுங்காமல் ஆழ்ந்திருக்கும் போதும் தன்னைப் பகைவர்கள் கொல்லுவதாகவும், தான் நெருப்பில் விழுந்து துடிப்பதாகவும் கனவு கண்டு கதறுவதுண்டு. அடிபடாமலேயே அடிபடுவதனுல் ஏற்படும் கஷ்டத்தை அவன் அனுபவித்து விடுகின்ருன். புவர்லோகத்தில் ஒருவன் சபரிமலைக்குப் போய்த் திரும்பி விடுகிருன். அதே போன்று வறுமையில் உழலும் ஒருவன் தான் ராஜ போகங்களை அனுபவிப்பதாகக் கனவு காணக்கூடும். விழித்த பின்பு கனவு கலைந்ததே என்று ஏங்கிப் போவான். கனவுகளின் தன்மை இத்தகையதாகும். அது புவர்லோகத்துக்குநிகர். பூலோகத்திலோ, அன்ருட வாழ்க்கையில் ஈடுபடுகையில் கோபம், சோகம் போன்ற பலவகை உணர்ச்சிகள் ஒருவனை ஆட்கொள்ளுதல் கண்கூடு. இங்ஙனம் ஜாக்ரதம் அல்லது விழிப்பு நிலை, ஸ்வப்னம் அல்லது கனவு நிலை, சுஷுப்தி அல்லது ஆழ்ந்த உறக்க நிலை ஆகிய மூன்று நிலைகளை மனிதன் அனுபவிக்கின்ருன். அவை அகத்தில் அவன் காணும் மூன்று உலகங்கள். புறத்தில் அவன் அறிந்துள்ள பாதாளம் துன்பத்துக்கும், சுவர்க்கம் இன்பத்துக்கும், பூலோகம் இன்ப துன்பங்களுக்கும் ஆதாரங்களாக அமைந்துள்ளன.

மூன்று புறவுலகங்களில் மனிதன் அடைகின்ற அனுபவங்கள் மூன்று விதமானவை. நாள்தோறும் மாறிமாறிப் பெறுகின்ற அகவுலக அனுபவங்களில் அவை பிரதிபலிக்கின்றன. இனி, ஜாக்ரதம், ஸ்வப்னம், சுஷுப்தி ஆகிய மூன்று நிலைகளுக்கும் பொதுவான இயல்பு ஒன்று உண்டு. மனிதன் இவற்றில் எந்த நிலையில் இருந்தாலும் அவன் பிராணன் இயங்கியே தீரவேண்டும். அவன் மூச்சு நிற்கக்கூடாது. அதே விதத்தில் காயத்ரியும் மூன்று நிலைகளிலும் ஜபிக்கத்தக்கது. காலக்கிரமத்தில் மூன்று அவஸ்தைகளிலும் மனிதன் எந்த அறிவுச்சுடரைத் தியானிக்கின்ருனே, அதன் மயமாக ஆதல் வெளிப்படை. ஸ்தூல ஜபத்தில் வாய் இந்த மகாமந்திரத்தை ஓதுகிறது. சூட்சும ஜபத்தில் மனம் இந்த மந்திரத்தின் தத்துவார்த்தத்தைக் கிரகிக்கிறது. உண்ட உணவு செரித்துக் குருதி மயமாய் ஆவதுபோன்று இந்த மகாமந்திரத்தைத் தொடர்ந்து ஜபிப்பதனுல் தோன்றுகின்ற அறிவொளியானது அதி சூட்சுமநிலையில் ஆன்ம ஒளியாக இலங்குகின்றது.

ஆழ்ந்த உறக்கத்தில் நாம் கும்பகர்ணனைப்

போன்று எதுவும் அறியாத துயிலில் அமிழ்ந் திருப்போம். ஸ்ரீமந் நாராயணனே பாற்கட லில் யோக நித்திரையில் அல்லது அனைத் தையும் அறிகின்ற துயிலில் ஆழ்ந்துள்ளார். இவ்வாறு சுஷுப்தி நிலையில் அவரவர் இயல் புக்கு ஏற்றவாறு சத்துவம், ரஜஸ், தமஸ் ஆகிய மூன்று உட்பிரிவுகள் உண்டு. அறிவுச் சுடர் கொளுத்தப்பெற்ற ஞானியானவன் சத்துவ நிலையில் உள்ளான். சமாதியில் ஈடுபட்டுத் தூங்காமல் தூங்கிச் சுகம் பெறுவது எக்காலம் என்று அவன் அடைய விரும்பும் குறிக்கோ ளினைத் தாயுமானவர் எடுத்தியம்புகின்றார். இந்நிலை சத்துவத்தில் சத்துவம் ஆகும். இவ் விதமே சத்துவத்தில் ரஜஸ், சத்துவத்தில் தமஸ் என்றும், ரஜஸில் சத்துவம், ரஜஸ், தமஸ் என் றும், தமஸில் மீண்டும் சத்துவம், ரஜஸ், தமஸ் என்றும் நிலைகள் உள்ளன. அந்நிலைகளில் உயிர்கள் வாழ்ந்து வருகின்றன; ஒவ்வொரு நிலையிலிருந்து அடுத்த நிலைக்கு முன்னேறி வருகின்றன.

ஆழ்ந்த உறக்கத்தில் நாம் ஒன்றும் செய்வ தில்லை. ஆகவே எந்தத் துன்பமும் நம்மை அப்போது நெருங்குவதில்லை. இந்தத் துன்ப மற்ற நிலையை விழித்திருக்கும்போதும் அனு பவிப்பவனே ஆத்மசாதனையில் முதிர்ச்சிபெற்ற ஞானியாவான். விழிப்பு, கனவு, ஆழ்ந்த உறக் கம் ஆகிய மூன்று நிலைகளிலும் விடாமல் இத யம் துடிப்பது போன்று காயத்ரீ ஜபமும் நிகழவேண்டும்.

மானுடன் ஒருவன் இவற்றுள் எந்தப் பிரி வைச் சார்ந்தவன் என்பதை ஓர் எளிய உபா யத்தால் அறியலாம். சத்துவத்தில் சத்துவம் உடைய ஞானி ஒருவன் ஜாக்ரதம், ஸ்வப்னம், சுஷுப்தி ஆகிய மூன்று நிலைகளிலும் கடவு ளின் நினைவிலேயே தோய்ந்திருப்பான். "எத் தொழிலைச் செய்தாலும், ஏது அவத்தைப்பட் டாலும் முத்தர் மனம் இருக்கும் மோனத்தே" என்று இந்நிலை விவரிக்கப்படுகிறது. தமஸில் ரஜோ குணம் மேலோங்கியவர்களோ எப் பொழுதும் சுறுசுறுப்பாகக் காரியத்தில்ஈடுபட் டிருப்பார்கள். தமஸில் தமோ குணம் உடை யவர்கள் படுக்கையிலிருந்து எழுந்திருக் கும்போதே சோம்பலுடன் விழித்து, கண்கள் சுழல, மீண்டும் படுத்துக்கொள்ள யத்தனிப் பார்கள். தமஸில் சத்துவம் உடையவர்கள் எழுந்தவுடனே தியானம் பண்ண வல்லவர் களாக இருப்பார்கள்.

உலக வாழ்க்கையில் சத்துவநிலையில் உள்ள வர்கள் தங்கள் உடல் வாழ்க்கை, மனோ வாழ்க்கை இரண்டையும் திருத்தி அமைக் கிறார்கள். மனத்திட்பம், சொல் ஆற்றல் உடல் உறுதி போன்ற தகுதிகளை அவர்கள் பெற்றிருப்பார்கள். பொருளும் அருளும் ஒருங்கே பெற்றிருப்பார்கள். கனவிலும், நனவிலும் உள்ளம் உயர்ந்த சிந்தனையிலேயே ஈடுபடும். இன்பமே எந்நாளும் துன்பமில்லை என்பதே அவர்கள் வாழும் நெறி. இங்ஙனம் எண்ணம் கடவுள் மயம் ஆவதால் அவர்கள் சொர்க்கத்துக்கு நிகரான சிறந்த வாழ்க்கை யையே வாழுகின்றார்கள்.

ஒருமுறை ஒருபாதிரியார் "ஏசுவை நம்பாத வர்கள் நரகத்திற்குத்தான் போகவேண் டும்" என்று கூறினார். சுவாமி விவேகா னந்தர் அப்பொழுது அவ்வழியே சென்று கொண்டிருந்தார். அவர் தத்துவங்களைப்புரிந்து கொண்டு மத ஒழுக்கங்களை அனுஷ்டிக்க வேண்டும் என்ற கொள்கையை உடையவர். மூட நம்பிக்கை, அச்சுறுத்தல், ஆசைகாட்டு தல் போன்ற முறைகளைக் கையாண்டு உரு வாக்கப்படும் ஒரு மதம் பொருளற்றது என்று கருதிவந்தார். எல்லாருடைய மன மும் சொர்க்கத்தில் இருப்பதே போன்று தெளிவாகவும் இன்பமாகவும் இருப்பதையே அவர் விரும்பினார். ஊட்டிக்குப் போய்வந்த வர் "சீசன் நன்றாக உள்ளது. நீங்களும் போங் கள்" என்பது போல் பேசிய பாதிரியாரை அணுகி அவர் "ஐயா! தாங்கள் கூறிய அந்த நரகம் எங்கிருக்கிறது? அது இருப்பதை நீங்கள் எப்படி அறிந்தீர்கள்? அங்கே நேரே போய்ப் பார்த்துவிட்டு இப்பொழுதுதான் திரும்பி வருகின்றீர்களா?" என்று கேட்டார். "ஏன் இவ்வாறெல்லாம் பேசுகின்றீர்?" என்று பாதிரி வினவினார். "எனக்கு அந்த நரகத்தின் முகவரி தேவைப்படுகிறது. அதன் முகவரியைக் கொடுங்கள்" என்று விவேகானந்தர் கேட்டார். "எதற்காக நீர் அங்கே போக விரும்புகிறீர்?" என்று பாதிரி வினவினார். "அங்கே சென்று நரகத்தை சொர்க்கமாக மாற்ற நான் முயல்

வேன். நரகம் என்பதே இருக்கக்கூடாது'' என்று விவேகானந்தர் கூறியதும் அறிவு வரப் பெற்றவராய்ப் பாதிரி வாய் பேசாது சென்ருர். எல்லாரையும் சொர்க்கலோக வாசிகளாக மாற்றியமைக்க வேண்டும் என்பதுதான் சுவாமி விவேகானந்தரின் திட்டம். சிந்தனை யைத் தெய்வ சம்பந்தமாக மாற்றியமைப்ப வர்கள் இந்தத் தெய்வலோகவாசிகளாகின் ருர்கள். எனவே நமக்கு நமது மனமே சொர்க் கம். நமது மனமே பாதாளம். பிறருக்காக மனம் நல்ல எண்ணங்களையே சிந்தித்தால் அது புவர்லோகம். கீழ்த்தரமான சிந்தனை பாதாள லோகத்தைக் குறிக்கும்.

ஓம் தத் சவிதுர் வரேண்யம் என்று சுலோ கம் தொடங்குகிறது. ப்ரசோதயாத் என்று முடிகிறது. "நம்முடைய அறிவைத் தூண்டு கிருர்; நாம் அவரைத் தியானிப்போம்" என்று பன்மையிலேயே சொற்கள் அமைந்துள்ளன. தனியொருவனுக்காக ஏற்பட்டது அன்று இந்த மகாமந்திரம் என்பதற்கு இதுவே அத் தாட்சி. ஒளி பொருந்திய திவ்யமானபொருள் தேவஸ்ய ஸவிது: என்று போற்றப்படுகிறது. பொருள் விளக்கம், செயல் முறை இரண்டுமே இந்தச் சுலோகத்தில் அடங்கியுள்ளன. இந்த மந்திரத்தை ஜபிப்பதற்கு இரண்டு பேர் கர்த்தாக்கள். ஒருவர் பரம்பொருள்; மற்றவர் ஜீவர்களாகிய நாம். நாம் சொல்லுகின்ருேம்; நம்மைச் சொல்லும்படி அந்தப் பரம்பொருள் தூண்டுகிறது. ஆக இரண்டு எழுவாய்களை இங்கே காணலாம். ஜீவன் தன்னைப்பற்றிச் சிந்திக்காமல் பரம்பொருளைப்பற்றிச் சிந்திக்க வேண்டும். அந்தப் பரம்பொருளுக்கு விளக்க மாக மூன்று சொற்கள் அமைந்துள்ளன.

தேவ: பர்க: சவித்ரு: என்பன அந்தப் பதங் களாகும். உலகில் தெய்வ சம்பத்து உடை யது எதுவும் உயர்ந்தநிலையில் உள்ளதாகும். கண்ணன் கீதையில் ஒவ்வொன்றிலும் தான் எத்தகைய உயர்ந்த நிலையில் இருக்கின்ருர் என்று சொல்லவரும்போது "மாதங்களில் நான் மார்கழியாக இருக்கின்றேன்; தேவரிஷிகளில் நான் நாரதர்" என்று தெய்வாம்சம் பொருந்திய வற்றையெல்லாம் விளக்குகின்ருர். ஞானக்கண் பொருந்திய ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் ஒரு வரை அல்லது ஒன்றைப் பார்த்த மாத்திரத் தில் அதில் உள்ள தெய்வாம்சத்தின் அளவு அவருக்குத் தெற்றென விளங்கிவிடும். நம்மில் ஒவ்வொருவர் மனதிலும் தெய்வத்தன்மை, மனிதத் தன்மை, விலங்குத் தன்மை ஆகிய மூன்றும் உண்டு. நம்முடைய உயிரைக் கொடுத்தாவது ஒருவரைக் காப்பாற்ற வேண் டும் என்று சில சமயம் நாம் எண்ணுவது உண்டு. அது தெய்வத்தன்மை. எடுத்த காரி யத்தைக் குறைவின்றி நிறைவேற்ற வேண்டும் என்று துடிதுடிப்புடன் செயல்புரிவது மனிதத் தன்மை. தான் ஒழிந்தாலும் பாதகமில்லை; தன் விரோதிக்குத் தீமை நிகழவேண்டும் என்ற மனப்பான்மையே விலங்குத் தன்மை. பாதுகாக்கலாம், ஒழித்துக்கட்டலாம், தியாகம் பண்ணலாம் என்ற மூன்று வகை மனப்பான் மைகள் நமக்குத் தோன்றுவதுண்டு. முற்றி லும் தெய்வத்தன்மை பெற்றவர்கள் தேவர்கள் எனப்படுவார்கள். இதையே "தேவஸ்ய" என்ற பதம் குறிப்பிடுகிறது.

பரமஹம்சர் மூன்றினிடத்துத் தெய்வத்தன் மையைக் கண்டார். பிருந்தாவனத்து மண், பூரிஜகந்நாதர் பிரசாதம், கங்கா தீர்த்தம் ஆகிய மூன்றையும் தெய்வத்தன்மை வாய்ந்த வையாக அவர் கண்டார். வேறு இடத்து மண், பிரசாதம், தீர்த்தம் ஆகியவற்றுக்கு நடுவேயும் அவரால் இம்மூன்றையும் தனித்தனியே இனம் காண முடிந்தது. அவற்றில் மிளிர்ந்த திவ்யம் அல்லது தேஜஸ் அவரது புலனறிவுக்கு எட்டுவ தாயிற்று. இவ்விதம் சுவாமி விவேகானந்தரிடத் திலும் இந்தத் தெய்வீகத் தன்மையைப் பரம ஹம்சர் கண்டார். அவரைக்கண்டதுமே இவ ருக்கு ஆனந்தம் ஊற்றெடுத்தது. "இளைஞா, இவ்வளவு நாள் எங்கே போயிருந்தாய்? என்னை ஏங்க வைத்து விட்டாயே! ஞானமே வடிவெடுத்த இத்தகைய இளைஞனும் இருள் மூடிய கல்கத்தா நகரத்தில் தோன்றமுடியுமா?" என்றெல்லாம் அவர் வினவுவார். அந்த இளை ஞன் அமுத கானங்களைப் பொழிந்தால் உடனே சமாதியில் ஆழ்ந்து போவது அவர் வழக்கம். அவரை அன்புடன் வரவேற்று இனிய உண வுப் பதார்த்தங்களைக் கொடுத்து அவர் உண் ணச் செய்வார். அவர் அருகில் இருப்பதே பரமஹம்சருக்குப் பரமானந்தமாக இருக்கும். இத்தகைய செயலையும், நெருக்கத்தையும்

பார்த்து விவேகானந்தர் இவர் பித்துப் பிடித்தவர்போலும் என்று எண்ணினர். தாம் சில நாட்கள் வராமலிருந்தால் இவர் என்ன செய்வாரோ என்று அவர் எண்ணினர். ஒரு முறை ஒருவாரகாலமாக அவர் பரமஹம்சரைப் பார்க்க வரவில்லை. அப்பொழுது அவரைத் தெரிந்த சில அன்பர்கள் பரமஹம்சரைத் தரிசிக்க வந்தார்கள். அவர்களுக்கு விவேகானந்தரை நன்கு தெரியும் என்று அறிந்தவுடனே பரமஹம்சர் "அவன் ஏன் சில நாட்களாக இங்கே வரவில்லை? நீங்கள் போனதும் இங்கே உடனே வரச்சொல்லுங்கள்" என்று கூறினர். அவர்களும் சம்மதம் தெரிவித்து அங்கேயே தங்கினர்கள். நள்ளிரவில் பரமஹம்சர் அவர்களிடம் சென்று அவர்களை எழுப்பி "நீங்கள் இன்னும் செல்லவில்லையா? நரேந்திரனை நான் அவசியம் பார்க்கவேண்டுமே" என்று துடித்தார். ஏன் அத்தகைய ஆவல் அவருள் மூண்டது? தெய்வீகத் தன்மை பொருந்தியவராக விவேகானந்தர் இருந்தார். எனவே அவரை மீண்டும் மீண்டும் பார்க்கப் பரமஹம்சர் விரும்பினர்.

விவேகானந்தர் "என்மீது ஏன் இத்தனை அன்பு செலுத்துகின்றீர்கள்? பந்த பாசங்களையும், காம காஞ்சனத்தையும் துறந்துவிட்ட தாங்கள் ஜடபரதர் போன்று பாசத்துக்குட்பட்டு என்மீது மட்டும் ஆர்வம் காட்டுவது பொருந்துமா?" என்று கேட்டார். பரமஹம்சர் உடனே தேவியிடம் சென்றார். "அம்மா, நீ என்னை ஏமாற்றிவிட்டாய். எனக்கு உலகப் பற்று முழுவதையும் நீ துடைத்துவிட்டதாகக் கூறினுய். இந்த இளைஞன்மீது ஏன் நான் பற்று வைக்கும்படி செய்தாய்?" என்று கேட்டார். அன்னை பவதாரிணி "நீ நரேந்திரனைக் காணும்போது மனித வடிவத்தை நோக்கவில்லை. அவனுள் உறையும் சிவத்தைத் தரிசிப்பதாலேயே நீ பேரானந்தம் கொள்கிருய். அந்தச் சிவப்பற்று உலகப்பற்று ஆகாது" என்ருள். உடனே விவேகானந்தரிடம் திரும்பிச் சென்று "சிறுவா, இனி இவ்வாறு உளருதே. நான் உன்னை சிவசொருபமாக வைத்துப் பார்ப்பதாகவே தேவி சொல்கிருள். ஆகவே என்னிடத்தில் உலகப்பற்று இருப்பதாகக் கூற வேண்டாம்" என்ருர்.

நம்மிடத்தில் உள்ள திவ்வியமான தெய்வீகத்தை நாம் தோற்றத்துக்குக்கொண்டு வர வேண்டும். அதற்கு எது உதவுகிறதோ அது தான் உண்மையான சமயம் என்று விவேகானந்தர் கூறுவார். வாழ்க்கை மயமாக, நமது இயல்பாக அது மாறி அமையவேண்டும். இது அவர் அனுபவத்தினல் அறிந்து கூறிய உண்மையாகும். காயத்ரி ஓத ஓத செயலற்றுக் கிடக்கும் தெய்வத்தன்மை நமக்கே உரியது ஆகும். அப்போது நம்முள் தெய்வீக இயல்புகள் வளர்வதைக் கண்கூடாகக் காணலாம்.

ஆசைகளை வளர்த்துக்கொள்வது மனிதனின் இயல்பு. சாரதாதேவியார் ராமேஸ்வரம் திருக்கோயிலுக்குச் சென்று தரிசனம் செய்தார். அப்போது இராமநாதபுரம் அரசர் ஓர் ஏற்பாடு பண்ணினர். தமது கருவூலத்தைத் திறந்து வைத்து அன்னையார் தமக்குப் பிடித்த ஆபரணம் எதையேனும் ஏற்றுக்கொண்டு தம்மை அனுக்கிரகிக்க வேண்டும் என்று வேண்டினர். அன்னையார் உலகப்பற்று அறவே அற்றவர். ஆதலால் தம்மோடு உடன் வந்த சிறுமி வேண்டுமானல் ஏதேனும் எடுத்துக்கொள்ளட்டும் என்று கூறி விட்டார். தம் உள்மனதில் அந்தச் சிறுமிக்குப் பொருளாசை வரக்கூடாது என்று பிரார்த்தனை பண்ணினர். அவள் விலை உயர்ந்த அணிகள் எல்லாவற்றையும் பார்த்து விட்டுத் தனக்கு எதுவும் பிடிக்கவில்லை என்று கூறிவிட்டாள். அரண்மனை ஆட்கள் வற்புறுத்தவும் ஒரு பென்சிலை வாங்கிக்கொண்டு அவள் பரம திருப்தி அடைந்தாள். தெய்வீக இயல்பு பெற்றவர்களின் தன்மை இத்தகையது ஆகும்.

வீட்டுக்கு விருந்தினர் வந்தால் அறுசுவை உணவையே எதிர்பார்ப்பார்கள். "வாருங்கள், சற்று நேரம் தியானம் பண்ணலாம்" என்று அழைத்தால் மறுநாள் முதல் அந்த வீட்டுக்கு வருவதற்கே தயங்குவார்கள். "காயத்ரியினல் என்ன பலன்? அதை ஓதினல் லாட்டரிச் சீட்டு விழுமா?" என்று கேட்பார்கள். இது மனித இயல்பு. ஆசையை ஒழித்தவர்களுக்கே தெய்வீக இயல்புகள் சித்திக்கும். "நிராசையின்றேல் தெய்வம் உண்டோ?" என்பது தாயுமானவர் வாக்கு.

தெய்விக நிலையில் தியானம், ஜபம், தவம், ஞானம், வைராக்கியம், பயமின்மை போன்ற பண்புகள் இயல்பாக வந்து அமைகின்றன. நிறைபொருளான தெய்வத்தைச் சார்ந்திருப்ப வர்களுக்குக் குறை எதுவும் இருப்பதில்லை. ஆகவே ஆசையும் தோன்றுவதில்லை.

பர்க: என்ற பதம் ஞானப் பிரகாசத்தைக் குறிக்கும். சுயம் பிரகாசமான பரம்பொருளைப் போலவே சூரியனும் தன்னில் தானே சுடர் விடுகின்றான். பர்க: என்பது ருத்ரனையும் குறிப்பதாகும். அழச்செய்து ஆட்கொள்வது ருத்ரனின் இயல்பு. உலகப் பொருள்களைக் குறித்து அழுவது ராவணாகார அழுகை. தெய்வத்தைக் குறித்து அழுவது ருத்ராகார அழுகை. "வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே" என்பார் மணிவாசகப் பெருமான். ஸ்ரீ ராம கிருஷ்ணர் சாதனை புரிந்து கொண்டிருந்த காலத்தில் ஒவ்வொரு நாள் மாலையும் கோயில் மணிஓசை கேட்டதும் "மற்றும் ஒருநாள் வீணாகி விட்டதே! தேவி இன்னும் உன்னைத் தரிசிக்க இயலவில்லையே" என்று தரையில்முகத்தைத் தேய்த்துக்கொண்டு அழுவார். (தொடரும்)

குறிப்புகள்

சிருங்கேரியில் பயிற்சி

வேதத்துக்கு ச்ருதி என்பது பெயர். காதால் கேட்பது என்பது அதன் பொருள். பழங்கால ரிஷிகள் தாங்கள் கண்ட உண்மைகளைப் பிறருக்கு எடுத்துக் கூற மற்றவர்கள் அவற்றைக் கேட்டு அறிந்து வந்தனர். காது வழியாகவே அவ்வுண்மைகள் சந்ததிகளுக்குத் தரப்பட்டன. எனவே அவற்றுக்குச் சுருதி என்ற பெயர் வந்தது. வேதபாராயணம் என்பது நாள்தோறும் நிகழ்ந்து வந்த நிகழ்ச்சியாகும். அவ்விதம் வேதபாராயணம் செய்வதன் மூலம் மனத்தைத் திருத்தி அமைத்து வந்தார்கள். வேதம் என்ற ஞானம் எல்லார்க்கும் பொது. காலக்கிரமத்தில் வேதங்களைப் பயின்றவர்கள் வேதபாராயணம் செய்வது தங்களுக்கே உரியது என்று எண்ணி அதைப் பொதுவுடைமை ஆக்கத் தவறிவிட்டார்கள். அதன் விளைவாக குறிப்பிட்ட ஒரு சாரார்மட்டும் வேதம் பயில அருகதை உடையவர்கள் என்றும், மற்றவர்கள் வேதம் பயில அருகதை அற்றவர்கள் என்றும் கருத்து நிலவ ஆரம்பித்துவிட்டது. வேதம் பயில்பவர்கள் உயர்ந்த ஜாதியினர் என்றும், அவர்களுக்கே அதைப் பயில உரிமை உண்டு என்றும் மக்கள் எண்ணி மற்றவர்கள் அதைப் பயில மறந்துவிட்டனர்.

தற்காலத்தில் தங்களுக்கே வேதம் பயில்வது உரியது என்று எண்ணி வந்தவர்களும் வேதபாராயணம் செய்வதில்லை. ஆகையால் இன்றைக்கு அந்த உன்னதக் கலை மறைந்து கொண்டிருக்கிறது. அதை மீண்டும் செயலுக்குக் கொண்டு வருவதற்காகவும், வேதம் பயில்வதைப் பொதுவுடைமை ஆக்குவதற்காகவும் 1985 ஏப்ரல் மாதம் சிருங்கேரிக்குப் பக்கத்தில் உள்ள ஹரிஹரபுரத்தில் ஒரு முகாம் நடத்தப் பெற்றது. ஆர். எஸ். எஸ். அமைப்பினால் அம் முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது. சுமார் பன்னிரண்டு வயது முதல் பதினைந்து வயது முடிய உள்ள சிறுவர்கள் பயிற்சிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஜாதி வித்தியாசமின்றி அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். காலையிலிருந்து மாலை வரையில் உடலையும் உள்ளத்தையும் புதுப்பிப்பதற்கேற்ற வாழ்க்கைத் திட்டம் வகுக்கப்பட்டது. இயற்கை எழில் மிகுந்த மலைகள் சுற்றிலும் உள்ள இடத்தில் சித்ர கூடம் என்னும் பெயரில் ஒரு பர்ணக சாலை கட்டப்பட்டது. துங்கா நதி என்ற நதியின் கரையில் அப்பர்ணகசாலை அமைக்கப்பட்டது. பிரார்த்தனை, யோகாசனம், சந்தியா வந்தனம், ஆசிரமப்பணி, வேதம் ஓதுதல், பஜனை, சம்ஸ்கிருதத்தில் உரையாடல் ஆகியவை அவர்களுக்குத் தினசரிக் கடமைகளாக வகுக்கப்பட்டன. இரவு உணவுக்குப் பின் கலாநிகழ்ச்சிகளில் அச்சிறுவர்கள் நம் பாரதப் பண்பை நாடகம் மூலமாக விளக்கிக் காட்டினர். இருபத்தைந்து நாட்கள் சீரிய முறையில் அச்சிறுவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. சமுதாயத்தில் கீழ்க்குலத்தவன் என்று ஒதுக்கப்பட்டுள்ள

ஜாதியினரிடத்திருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட குழந்தைகள் தெளிவாக வேத மந்திரத்தை உச்சரிக்கக் கற்றுக்கொண்டனர். வேதம் அனைவர்க்கும் உரியது என்பதை இம்முகாம் நிரூபித்துக் காட்டியது.

அப்பயிற்சி முகாமை ஹரிஹரபுரம் மடாதிபதி ஆரம்பித்து வைத்தார். அவர் பேச்சில் கூறியதாவது: ''வேதங்களையும், ரிஷிகளின் வாழ்க்கை முறையையும் பொது மக்களிடையே புகுத்துவதற்கு வேதம் கற்ற அந்தணர்கள் உறுதி எடுத்துக்கொள்ளவேண்டும். சிருங்கேரியிலுள்ள சாரதா பீடத்தில் முன்பு நூற்றுக்கணக்கான மாணவர்கள் வேதம் பயின்று வந்தனர். ஆனால் இன்றோ இரண்டொருவர் தாம் வேதம் கற்று வருகின்றனர். இந்தநிலை ஏற்படக் காரணம் என்ன என்று ஆராய்ந்து பார்த்ததில் தலைமையில் உள்ளவர்கள் இதில் அக்கறை எடுத்துக்கொள்ளாததே என்பது தெரிய வந்தது. இந்நிலை நீடித்தால் வேத அத்தியயனம் பண்ணுபவர்கள் அரிதாகப் போய்விடுவார்கள். இக்குறையைப் போக்க ஹரிஹரபுரத்தில் நிகழும் இப்பயிற்சி முகாம் போன்று நாட்டில் பல இடங்களிலும் நடைபெறவேண்டும். அப்பொழுதுதான் மக்களுடைய மனப்பான்மை திருந்தி அமைந்து சுபிட்ச வாழ்வு ஏற்படும்''

சமுதாயத்தைப் பண்பட்ட சமுதாயம் ஆக்குதற்கு வேதம் கற்றவர்களும் அறிஞர்களும் சிரத்தையுடன் பாடுபடவேண்டும். மக்களுடைய மனப்பான்மையைத் திருத்தி அமைப்பதற்காக மேற்கொள்கின்ற செயல்தான் இன்று சமுதாயத்திற்குச் செய்யும் சீரிய தொண்டு ஆகும்.

பாணவர்களின் ஆலயப்பணி

'' திருப்பராய்த்துறை ஆதிகாலந் தொட்டு யாத்ரிகர்கள் கொண்டாடிப் போற்றிய புண்ணிய ஸ்தலமாக இருந்து வந்துள்ளது. சைவ சமயக் குரவர்களுள் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், மாணிக்க வாசகர் ஆகிய மூவர் இந்த ஸ்தல மகிமையைப் பாடியுள்ளனர். பண்டைய ஸம்ஸ்கிருத நூல்களும் இந்த ஸ்தலத்தின் பெருமையைப் புகழ்ந்து கூறியுள்ளன. பிரம்மோத்தர கண்டம் என்ற புராணமொன்றில் 'சூரியன் துலாவிஷுவை அடையும் பொழுது பசு நாக்குப் போன்ற தன்மை கொண்ட இலையை உடைய பராய் மரத்தைக் கொண்ட பராய்த்துறை க்ஷேத்திரத்தில் நீராடியவர்களுடைய பாபங்களைக் காவிரிபோக்கி, எல்லா நன்மைகளையும் கொடுக்கிறது' என்று கூறப்பட்டுள்ளது.'' திருப்பராய்த்துறைத் திருக்கோயிலைக் குறித்து ஆன்றோர்கள் பகன்றுள்ள அருள்மொழி இதுவாகும். தீர்த்த விசேடம் பொருந்திய இத்திருத்தலத்தில் எம்பெருமான் தாருகாவனேசுவரர் என்றும், இறைவி ஹேமவனேஸ்வரி என்றும் வழங்கப்படுகின்றார்கள். பராய்த்துறைநாதர் என்பதும் பசும் பொன் மயிலாம்பிகை என்பதும் அவர்தம் தமிழ்த்திரு நாமங்களாகும். சுற்று வட்டாரத்தில் பரப்பிலும், அமைப்பிலும் இதுவே மிகச் சிறந்த வழிபாட்டுத் தலம் ஆகும். இதில் மதில்கள் யாவும் அழகிய கருங்கற் திருப்பணியாகும்.

ஆலயம் தொழுவது சாலவும் நன்று. என்பது குழந்தைப் பருவத்திலேயே பெறப்படுகின்ற அறிவாகும். கண் இருந்தும் குருடராய் நம்மில் பெரும் பான்மையோர் அமைதி கொலுவீற்றிருக்கும் இத்தகைய ஆலயங்கட்குச் சென்று வழிபாடு நிகழ்த்தி ஆன்மீகத்தில் முன்னேற வேண்டும் என்று முயல்வதில்லை. நமது மூதாதையர்கள் கொடை உள்ளத்துடன் நமக்கு வழங்கிச் சென்றுள்ள இத்தகைய செல்வங்களை நாம் பூரணமாகப் பயன்படுத்தத் தெரிந்துகொள்ளவேண்டும். நாள்தோறும் ஆலயம் சென்று வழிபடுவதால் உள்ளம் தூய்மையடையும்; உடல் சுறுசுறுப்பு அடையும்; எண்ணம் விரிவடையும். வாழ்க்கையில் சீரான முன்னேற்றம் நிகழும்.

நாம் வசிப்பதற்கு என்றும், அலுவல்கள் புரிவதற்கு என்றும் ஏற்படுத்தியுள்ள இடங்களைத் தூய்மையாக வைத்துக் கொள்ளவேண்டும். இல்லையேல் நமக்கும் விலங்குகளுக்கும் எத்தகைய வேறுபாடும் இன்றிப் போய்விடும். அவ்விதமிருக்க அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகனை சர்வேசுவரனே எழுந்தருளவேண்டுமாயின் அந்த இடம் எத்தகைய புனிதம் வாய்ந்ததாக இருத்தல் வேண்டும்! நாமும் எத்தனைப் பக்தி விசுவாசத்துடன் அதனை அணுகவேண்டும்! இங்ஙனம் உள்ளும், புறமும் அப்பழுக்கில்லாது தூய்மை நிறைந்து காணப்

படும் இடங்களில் மட்டுமே தெய்விகமும் உட னுறையும். கடவுளின் மீது உண்மையான பக்தி பூண்டவர்கள் ஆலயத்தில் திகழும் அருட் சக்தியை மலினப்படுத்தும் செயலைப் பொறுத் துக்கொள்ள மாட்டார்கள். குப்பையும் கூள மும் மலிந்து சந்தைக்கடை இரைச்சல் மிகுந்த கட்டடங்களில் சான்னித்தியம் நிலைத்திருக்க முடியாது. பக்தி இருப்பதாகப் பாவனை பண்ணுவோர் அதிகரிக்குமளவு ஆடம்பரங் களும், படாடோபங்களுமே ஆலயங்களில் மிகுந்து காணப்படும். இதனால் ஆன்மீகத்தில் ஆழ்ந்த பற்றுடையோர் ஆலயத்திற்குச் செல் வதையும் தவிர்க்க நேரிடலாம்.

"தொண்டு பாடியும் தூமலர் தூவியும்
இண்டைகட்டி இணையடி ஏத்தியும்
பண்டரங்கர் பராய்த்துறைப் பரங்கரை
கண்டு கொண்டடியேன் உய்ந்து போவனே."

ஆலயத்தில் தொண்டும், தொழுகையும் எவ் வாறு நிகழவேண்டும் என்பதை அப்பர் பெரு மான் இப்பாடலில் இயம்புகின்றார். இக் காலத்து இளைஞர்களை இத்தகைய பயிற்சி களில் பழக்கப்படுத்த நாம் கடமைப்பட்டுள் ளோம். தபோவனத்தின் நிர்வாகத்தில் இயங்கி வரும் திருப்பராய்த்துறை விவேகானந்த மேல் நிலைப்பள்ளியில் பயிலும் மாணவ மாணவியர் வாரந்தோறும் இத்திருக்கோயிலில் வழிபாடு நிகழ்த்தி வருகின்றார்கள். இவ்வருடம் முதல் மாதமொருமுறைஒவ்வோருவகுப்பாகச்சென்று கோயிலில் உழவாரப்பணி செய்வது என இப்பள்ளியின் ஆசிரியர்களும், மாணவர்களும் தீர்மானித்துள்ளார்கள். கடந்த 23—7—85 அன்று இப்பள்ளியில் பயிலும் பதினொன்றும், பன்னிரண்டாம் வகுப்பு மாணவ, மாணவியர் நூறுபேர்கள் இக்கோயிலில் உழவாரத் தொண்டுபுரிந்தார்கள். அவர்கள் பல குழுக் களாகப் பிரிந்து ஒவ்வொரு குழுவினரும் ஒவ் வோர் இடத்தில் ஒரு குறிப்பிட்ட பணிக்குப் பொறுப்பு ஏற்றுக்கொண்டார்கள். உட்பிர காரம், வெளிப்பிரகாரம், மகாமண்டபம், அர்த்த மண்டபம், நந்தவனம் என்று எல்லா இடங் களிலும் அவர்கள் ஒட்டடை அடித்து தூண் கள், மேடை, உத்தரம், சன்னிதியின் சுற்றுச் சுவர்கள் எல்லாவற்றையும் தூசுபோகத் தட்டி, தரை எங்கும் சீராகப் பெருக்கித் தண்ணீர் விட்டுக் கழுவினார்கள். வெளிச்சுற்றில் முட் செடிகள், கல், புல் முதலியனவற்றை அகற்றிப் பாதையைச் செப்பனிட்டார்கள். ஒன்றரை மணிநேரத்தில் இங்ஙனம் கோவிலைப் பளிச் சென்று துப்புரவாகச் செய்தார்கள்.

பொதுமக்கள் தத்தம் பகுதிகளில் உள்ள திருக்கோவில்களில் இவ்வாறு சிரமதானம் செய்து கர்மயோகத்தில் ஈடுபடுதல் அவசிய மாகும். தங்கள் தங்கள் வீட்டுப் பிள்ளைகளை யும் இவ்வாறு பயிற்றுவிப்பது தெய்வத்துக் குச் செய்யும் மிகச் சிறந்த தொண்டாகும். கோயில்களில் அகத்தூய்மையும், புறத்தூய் மையும் ஓங்குகின்ற அளவு ஆன்மீக சக்தியும் அதிகரிக்கச் செய்யும். மக்கள் அனைவரும் சுபீட்சமாய் வாழ்வாங்கு வாழ்தற்கு இவ் வெளிய முறைகளைக் கடைப்பிடிக்கக் கடமைப் பட்டிருக்கிறார்கள். நமது கோயில்களில்அருள் நிலையையும், தூய்மையையும் வளர்க்க இத் தகைய திட்டங்களை நாம் மேற்கொண்டு செயல்பட்டு வருவோமாக.

செய்திகள்

நிகழ்பவை:

17—8—85 அன்று சிவகாசி ஸ்ரீ சாரதா ஆச்ர மத்திலும், 18—8—85 அன்று ராஜபாளையம் பழைய பாளையம், பாரதி கல்யாண மண்டபத் திலும் ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள் ஒரு நாள் அந்தர்யோகம் நடாத்துவார்கள்.

22—8—85 வியாழக்கிழமையன்று ஆடி விடு முறைக்குப் பின் ஸ்ரீ விவேகானந்த வித்யா வனக் குருகுலப்பள்ளி திறக்கப்படுகிறது.

செப்டம்பர் மாதம் 7-ஆம் தேதி சனிக்கிழமை மாலை 5-30 மணி முதல் 7-30 மணிவரை மதுரை லக்ஷ்மிநாராயணபுரம் அக்ரஹாரம் 10, மடம் சந்தில் அமைந்திருக்கும் ஸ்ரீ சாரதா சமிதியில் ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் தலை மையில் ஸ்ரீகண்ணன் கருத்தரங்கு நடைபெறும்.

7—9—85 சனிக்கிழமையன்று ஸ்ரீ ஜயந்தியை முன்னிட்டு ஸ்ரீ விவேகானந்த வித்யாவனக் குரு குல மாணவர்கள் பகல் பன்னிரண்டு மணி நேரம் அகண்ட நாமபஜனையும், மாலை 6-30 மணியிலிருந்து 7-30 மணி வரையிலும் ஐக்கிய வணக்கமும் செய்வார்கள்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
இயற்றிய நூல்கள்

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் தமிழ் வியாக்கியானம்	ரூ. 26-00
ஸ்ரீமத் பகவத்கீதை 15-ம் பதிப்பு ,, ...	21-00
மஹாபாரதம் ,, ...	8-00
இராமாயணம் ,, ...	7-00
ஸ்ரீ தாயுமானசுவாமி பாடல்கள் ,, ...	6-00
ஸ்ரீராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரி ,, ...	6-50
தினசரி தியானம் ,, ...	5-00
ஞானயோக விளக்கம் ...	15-00
ராஜயோக விளக்கம் ...	12-00
கர்மயோக விளக்கம் ...	10-00
பக்தியோக விளக்கம் ...	9-00
விவேகானந்த விவரணம் ...	7-50
விவேகானந்த உபநிஷதம் ...	7-00
கடவுளின் வடிவங்கள் ...	6-00
ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம் ...	6-00
சந்தேகம் தெளிதல் பாகம்—1 ...	5-50
சந்தேகம் தெளிதல் பாகம்—2 ...	5-50
மாணவருக்கு ஒரு சொல் ...	4-50
சகோதரி நிவேதிதை ...	3-75
சுவாமி விவேகானந்தர் ...	3-50
பஜனைப்பாடல்கள் ...	3-50
ஸ்ரீ சாரதாதேவியார் சரிதம் ...	3-00
அநுஷ்டான வேதாந்தம் ...	3-00
எதிர்கால இந்தியா ...	3-00
தேவரகசியம் (முதலிய கதைகள்) ...	3-00
தாயுமானவர் இயற்றிய	
கருணாகரக் கடவுள் விரிவுரை ...	3-50
பரிபூரணானந்தம் டி ...	3-00
சின்மயானந்த குரு டி ...	3-00
ஆனந்தமானபரம் டி ...	3-00
சுகவாரி டி ...	3-00
மௌனகுரு வணக்கம் டி ...	3-00
எங்கும்நிறைகின்றபொருள் டி ...	2-50
மலைவளர் காதலி டி ...	1-50
பரசிவ வணக்கம் டி ...	1-00
கண்ணன் என்னும் கடவுள் ...	2-50
அறம் வளர்த்த நம்பி ...	2-50
சந்நியாசி ...	2-50
விரதவீரர் பீஷ்மர் (நாடகம்) ...	2-50
ஹரிச்சந்திரன் டி ...	2-00
தவப்புதல்வர்கள் டி ...	2-00
வாலி மோட்சம் டி ...	2-00
பாதுகாபட்டாபிஷேகம் டி ...	1-75
நன்மக்களைப் பெறுதல் ...	1-75
விபீஷணன் சரணாகதி (நாடகம்) ...	1-50
பரமஹம்சர் பாமாலை ...	1-50
காயத்ரீ ...	1-50
மாணாக்கன் ...	1-25
செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா? ...	1-25
சைவன் யார்? ...	1-25

*ஆலய வழிபாடு ...	1-25
*ஆத்ம சக்தி ...	1-25
*மனிதனது நிஜசொருபம் ...	1-25
*சிவதத்துவம் ...	1-25
இறைவணக்கம் ...	1-00
குழந்தைகளின் களிக்கூடம் ...	1-00
இராவண தத்துவம் ...	1-00
ஏகலைவ்யனின் குருபக்தி (நாடகம்) ...	1-00
தானவீரன் கர்ணன் (நாடகம்) ...	1-00
தபோபலன் (நாடகம்) ...	1-00
பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி கர்வபங்கம் ,,...	1-00
இந்துமதமும் கிறிஸ்துவமதமும் ...	1-00
நோய்க்கு இடம் கொடேல் ...	1-00
*கணபதி ...	1-00
*சக்தி தத்துவம் ...	0-90
நன்னெறிகளும் அருள் வாக்குகளும் ...	0-80
*சூரியநாராயணன் ...	0-75
தெய்வீக மகிமைகள் ...	0-75
*முருகக்கடவுள் ...	0-75
வர்ணாச்ரம தர்மம் ...	0-70
தாயுமானவர் ஆலயத்தில் தத்துவ அமைப்பு ...	0-60
*விஷ்ணு தத்துவம் ...	0-50
கர்மகாண்டம் எது? ஞானகாண்டம் எது?	0-50
அருள் விருந்து (பௌண்ட் செட்) ...	10-00
விவேகானந்தரின் வீர கர்ஜனை ...	0-40
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும் ...	0-30
கந்தர் அநுபூதி ...	0-30
The Bhagavad Gita (12th Imp.) ...	30-00
Sri Lalithambika Sahasranama Stotram	15-00
The Indian National Education ...	10-00
Tirukkural (with plastic cover) ...	9-00
Ramakrishna lives Vedanta ...	8-00
Man Making Message ...	7-00
Siva Sahasranama Stotram ...	7-00
Ramayana (with plastic cover) ...	7-00
Mahabharata ,, ...	6-00
The Bhagavad Gita (Small Size) ...	6-00
Sri Krishna-The Manifest Divinity ,, ...	6-00
Daily Divine Digest (DELUXE) ...	6-00
Daily Divine Digest (Ordinary) ...	4-00
Facets of Brahman or The Hindu Gods ..	5-00
Sri Vishnu Sahasranama Stotram ...	4-00
Thus Speaks Tayumana Swamigal ...	3-50
*Introducing The Gita ...	2-00
Holy Bible—In the Light of Vedanta ...	1-50
Reminiscences of Master Mahashaya ...	1-50
The Nursery School ...	1-50
The Garland of Paraaparam ...	1-50
*Key to Higher Life ...	1-25

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

மதமாற்றம், சமூகத்தில் காணப்படும் தர்மானுஷ்டானக் குறைவு இவைகளுக்குப் பரிகாரமாக மக்கள் மனதில் நல்ல உணர்வுகளைத் தூண்டி பக்தி வழியில் வழி நடத்துவதற்கு ஒரு நல்ல உபாயமாக தர்ம சக்கரம் மக்கள் பலருக்கும் கிடைக்கவேண்டுமெனக் கருதுகிறோம். நம் அன்பர்களில் பலரும் இக்கருத்தைத் தெரிவிக்கிறார்கள். ஆகவே நம் சந்தாதாரர்கள் தாங்களே தர்ம சக்கரத்தைப் பயன்படுத்தவும் மற்றவர்களுக்குத் தந்து படிக்க உதவவும் புதிய சந்தாதாரர்களைச் சேர்த்துத் தந்து உதவும்படியும் வேண்டுகிறோம்.

தர்ம சக்கரத்தில் வரும் விஷயங்கள் செய்தித்தாள்களில் உள்ளவை போன்று தாற்காலிகமானவைகளாக இல்லாமல் நிரந்தரமான தத்துவ ஆராய்ச்சிகளாக இருக்கின்றன. சந்தர்ப்பம் வாய்க்கும் பொழுதெல்லாம் திரும்பவும் வாசிக்கக் கூடிய ஒரு நூலாக இது அமைகிறது. ஆதலால் ஓராண்டுக்கான பன்னிரண்டு தர்மசக்கர இதழ்களையும் பொருளடக்கத் துடன் பைண்டு செய்து வைத்துக்கொண்டால் அது ஒரு நல்ல புத்தகமாக அமையும். நாம் படிப்பதற்கும் மற்றவர்களுக்குப் படிக்கத் தருவதற்கும் அது வசதியாக இருக்கும்.

ஆகவே அன்பர்கள் முயன்று புதிய சந்தாதாரர்களை அறிமுகப் படுத்திப் பலரையும் ஆத்மீக வாழ்க்கையில் ஈடுபடச் செய்யக் கோருகிறோம். குறிப்பிட்ட அளவே பிரதிகள் அச்சாக்கப்படுவதால் புதுப்பித்துக்கொள்ள வேண்டிய பழைய சந்தாதாரர்கள் உடன் புதுப்பித்துக்கொண்டு மற்றும் பலரையும் புதிய சந்தாதாரர்களாகச் சேர்த்துத் தரும் அருட்பணியில் ஈடு படும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

பொருளாதாரத்தில் எந்த நிலையில் உள்ளவர்களுக்கும் தர்ம சக்கரம் கிடைக்கவேண்டும் என்னும் நோக்கத்துடன் சகாய சந்தா, சாதாரண சந்தா. டிபாசிட் சந்தா, அரசினர் நூல் நிலையங்களுக்கு இலவசமாக அனுப்பு தல் ஆகிய முறைகளை நடைமுறையில் வைத்துள்ளோம்.

சந்தா விவரம் பொருளடக்கத்தின் கீழ் தரப்பட்டுள்ளது.

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639 115

திருச்சி ஜில்லா.

Edited by SWAMI NITHYANANDA,
Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.